விலை ரூபா: 7.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி
*Valampurii*

பக்கங்கள்:- பன்னிரண்டு

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | கார்த்திகை 24 | வியாழக்கிழமை | (09.12.2004) | தொலைபேசி 2223378, 2227644 | ஒலி 356

ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

# திஸநாயக்க மீதான தீர்ப்புக்கெதிராக

# பாராளுமன்றில் ஐ.தே.க. ஆர்ப்பாட்டம்

## செங்கோலும் எடுத்துச் செல்லப்பட்டது

## சபை நடவழிக்கை இருதடவை ஒத்திவைப்பு

(நமது நிருபர்)

ஐக்கிய தேசியக் கட்சியின் நுவரேலியா மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரும் சமுர்த்தி விவகார முன்னாள் அமைச்சருமான எஸ்.பி. திஸநாயக்கவுக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் விதித்த இரண்டு வருட கடூழிய சிறைத் தண்டனைக்கு எதிராக ஐ.தே.க.பாராளுமன்ற உறுப்பினர்கள் நேற்று சபையில் பெரும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் சபையில் ஏற்பட்ட அமளிதுமளிகளுக்கு இடையில் செங்கோலும் எடுத்துச் செல்லப்பட்டது. சபை நடவடிக்கைகளை தொடரமுடியாமல் இரண்டு தடவைகள் சபை அமர்வுகளை சபா நாயகர் ஒத்திவைத்தார். (௨ ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். நகரில் புளொட் விடுதிமீது நேற்றிரவு 2 கைக்குண்டு வீச்சு

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியாசாலைக்கு முன்பாகவுள்ள பிளொட் அமைப்பின் விடுதி மீது நேற்றிரவு கைக்குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

நேற்றிரவு 8.45 மணியளவில் இரண்டு கைக்குண்டுகள் விடுதியின் மீது வீசப்பட்டுள்ளது. கைக்குண்டு வீசியவர்கள் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

விடுதி மீது இரண்டு கைக்குண்டுகள் வீசப்பட்டது. அதில் ஒன்று வெடித்துச் சிதறியது. மற்றையது வெடிக்கவில்லை. சம்பவம் நடைபெற்றபோது அங்கு எவரும் இல்லாததால் உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படவில்லை.

சம்பவம் தொடர்பாக உடனடியாக இராணுவக் குண்டு செயலிழக்கும் பிரிவிற்கு அறிவிக்கப்பட்டது. சம்பவ இடத்திற்கு வந்த பெருமளவான இராணுவத்தினர் குண்டை செயலிழக்கச் செய்தனர். (ச-51)

## யாழ். நகரில் அதிகாலை வேளை இரு கடைகள் தீயில் எரிந்து நாசம்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரின் மையப் பகுதியில் பூபாலசிங்கம் புத்தகசாலைக்கு அருகாமையில் அமைந்துள்ள இரண்டு கடைகள் இன்று அதிகாலை 12.30 மணியளவில் எரிந்து சாம்பலாகியது.

ஸ்கைறோஸ் றெக்கோடிங் பார் மற்றும் மண்டேலா புத்தகசாலை ஆகிய இரண்டு கடைகளுமே முற்றாக எரிந்து நாசமாகியுள்ளன.

உடனடியாக தீயணைக்கும் பிரிவினர் சம்பவ இடத்திற்கு விரைந்து தீயை அணைக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். இவர்களுடன் இராணுவத்தினரும் மற்றும் பொலிஸாரும் இணைந்து தீயை அணைக்கும் முயற்சியில் ஈடுபட்டனர்.

எனினும், தீயை உடனடியாக அணைக்கமுடியவில்லை. அதேவேளை அருகில் உள்ள மேலும் இரண்டு புத்தகசாலைகளில் தீ பரவாதவாறு தடுக்கப்பட்டது. (ச)



எரிந்து நாசமாகிய "ஸ்கைறோஸ் றெக்கோடிங் பாரை" படத்தில் காணலாம். படம்: சதீபன்

## மகேஸ்வரன் குழப்புத்தை ஏற்படுத்த பின்னணியில் ஒருவர் இருக்கிறார்

### செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் மைத்திரிபால

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் குழப்பங்களை விளைவித்து வரவு - செலவுத்திட்டத்தின் குழுநிலை விவாதத்தின் மீதான வாக்களிப்பைத் தாமதப்படுத்த ஐக்கிய தேசியக் கட்சி முற்பட்டு வருவதாக அமைச்சர் மைத்திரிபால சிறிசேன குற்றஞ்சாட்டியுள்ளார்.

நேற்றுக் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் ஐக்கிய தேசியக் கட்சி இவ்வாறான குழப்பங்களை ஏற்படுத்த முற்பட்டாலும் அதனை எதிர்கொள்ள அரசாங்கம் பலமான நிலையிலேயே உள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரான தி. மகேஸ்வரனின் செயற்பாடுகள் முற்றிலும் பாராளுமன்ற பாரம்பரியங்களுக்கு முரணானதாகவே உள்ளது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் கிரனைட் வீச்சு; துப்பாக்கிச் சூடு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகருக்கு வெளியே அரசடி சந்திக்கு அண்மையிலுள்ள சட்டத்தரணியொருவரின் இல்லம் மீது நேற்று மாலை 6.45 மணியளவில் இனந்தெரியாத நபர்களினால் கைக்குண்டு வீசப்பட்டுள்ளது.

இக் கைக்குண்டுத் தாக்குதலின்போது சட்டத்தரணி அலுவலகத்தின் மேல்மாடியில் இருந்துள்ளார்.

வெடித்து சிதறிய கைக்குண்டினால்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய - இலங்கை கடற்படை கூட்டுப் பயிற்சி 14 இல் ஆரம்பம்

(கொழும்பு)

இந்திய - இலங்கைக் கூட்டு கடற்படைப் பயிற்சி எதிர்வரும் 14ம் திகதி தொடக்கம் 17ம் தகதி வரை நடைபெறவுள்ளதாக இந்தியப் பாதுகாப்பு அதிகாரி கப்டன் சுறாஸ்வெரி தெரிவித்துள்ளார்.

இந்தப் பயிற்சி நடவடிக்கையில் இந்தியக் கடற்படைக்குச் சொந்தமான இரு அதிவேக கப்பல்கள் தாக்குதல் படகுகள், இந்தியத் தயாரிப்பான செரெக் வானூர்திகள் என்பன பயன்படுத்தப்படவிருக்கின்றன.

தொடர்ச்சியாக நான்கு நாடகளுக்கு தெற்கு கடற்பிராந்தியத்தில் நடைபெறும் இந்தப் பயிற்சிக்கான அனைத்து முன்னேற்பாடுகளும் தற்போது முழுமூச்சுடன்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## நீதிபதி கொலைச் சந்தேக நபரை நாட்டைவிட்டு வெளியேற்ற திட்டம்

### பாராளுமன்றத்தில் ஹெல உறுமய எம்.பி

(கொழும்பு)

உயர் நீதிமன்ற நீதியரசர் சரத் அம்பேபிட்டிய படுகொலையின் சூத்திரதாரி எனக் கருதப்படும் மொஹமட் றியாஸ் நௌபர் மஜிஸ்ரேட் நீதிமன்ற உத்தரவின் படி களுத்துறை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்படாமல் வெலிக்கடை சிறைச்சாலையிலேயே தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக ஜாதிக ஹெல உறுமய பாராளுமன்ற உறுப்பினர் வண. அத்துரலிய ரத்தின தேரர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# இன்று ஒரு தகவல்

## காந்த ஈர்ப்புவிசை

நிலாவுக்கும் பூமிக்கும் சம்பந்தம் உண்டென்று சொன்னால் அதை நீங்கள் நம்புவீர்கள். ஆனால் நிலவுக்கும் நமது வயிற்றுக்கும் சம்பந்தம் உண்டென்று சொன்னால் அதை நீங்கள் நம்புவீர்களா? நான் சொன்னால் சந்தேகப்படுவீர்கள். இல்லினாய்ஸ பல்கலைககழகத்தில் உள்ள ஒரு ஆராய்ச்சியாளர் இதைச் சொல்கிறார். அவரது பெயர் **Proof Ralph.Morris** அந்தப் பேராசிரியா 5 வருடமாக ஒரு ஆராய்ச்சி செய்தார். 100 பேருக்குமேல் சோதனையும் செய்து பார்த்து விட்டுச் சொல்கிறார். வயிற்றுவலிக்கும் நிலவுக்கும் சம்பந்தம் உள்ளது. குறிபபிட்டுச் சொல்வதாயின் அல்சருக்கும் பௌர்ணமிக்கும் சம்பந்தம் உள்ளதென் கிறார் அவர்.

அவர் பலரையும் சோதித்துப் பார்த்தாரல்லவா? அவர்களுக்கெல்லாம் மார்புவலி அல்சர் போன்றவை பௌர்ணமி காலத்தில் அதிகமாக இருந்ததாம். அது சரி 2½ இலட்சம் மைலுக்கு அப்பாலுள்ள அவ்வளவு பெரிய நிலவுக்கும இங்கேயுள்ள வயிற்றுக்கும் எப்படி சம்பந்தம் இருக்க முடியும்?

அதற்குக் காரணம் என்னவென்று அவரே சொல்லியிருக்கிறார். அதாவது பூமிக்கும் நிலவுக்கும் இடையே ஏற்படக் கூடிய காந்த ஈர்ப்புச் சக்திதான் அதற்குக் காரணமாம். மனிதனின் உடலையும் மனதையும் இந்த ஈர்ப்புச் சக்தி இரும்பைத்தானே பாதிக்கும்! எப்படி உடலைப் பாதிக்கின்றது.

மனிதனின் உடலிலும் இரும்பு உள்ளது. அதனால் அநத ஈர்ப்புச் சக்தி நமது உடலைப்பாதிக்கின்றது. இதை நிரூபிப்பதற்கு ஒரு சோதனையும் செய்து பார்த்திருக்கின்றனர். எப்படி என்றால் முதலில் ஒரு கூண்டு தயார் செய்தனர். அதற்குள் ஒரு எலியைப் பிடித்துவிட்டனர். அந்த எலி சுற்றிச் சுற்றி ஓடியது. காந்த சக்தியை அந்தக் கூண்டுக்குள் உண்டாக்கினார்கள். உடனே அந்த எலியிடம் ஒரு மாறுதல். அது யோசனை செய்கிறது. மயங்கி நின்றது. சுற்றி ஓடுவது குறைந்தது.

இதிலிருந்து என்ன தெரிகிறது? காந்தம் உண்டாக்கக் கூடிய ஈர்ப்புச்சக்தி அந்த எலியின் உடலையும் மனதையும் பாதிக்கிறது. இதேபோல் தான் பூமிக்கும் நிலவுக்கும் இடையே ஏற்படக்கூடிய காந்தசக்தி உடலையும் மனதையும் பாதிக்கிறது.

எங்கள ஊரில் ஒரு பாட்டி இருந்தார். அவர் எப்போதும் சொல்வார் அமாவாசையில் மருந்து சாப்பிடாதே. பௌர்ணமியில் மருந்து சாப்பிடாதே என்று. அதையாரும் கேட்பதில்லை. பலர் அமாவாசையன்று வயிற்றுக்கு ஓய்வு கொடுப்பது இப்போதும் வழக்கமாக உள்ளது. இப்போதுள்ள மருத்துவாகள் காலக்கெடு விதிப்பது உண்டு. இன்னும் 24 மணி நேரம் தாண்டினால் தான் எதையும் உறுதியாகக் கூற முடியும். அந்த நேரத்தைத் தாண்டினால் நோயாளி ஆபத்தான கடடத்தைத் தாண்டி விட்டார் என்று அர்த்தம் என்பார்கள்.

இதேபோல் அந்தப் பாட்டியும் காலக்கெடு விதிப்பார்கள். "எதற்கும் இந்த அமாவசை தாண்டப்படும் அதன்பின் சொல்கிறேன்" என்பார். இப்படிபலருக்கு கெடுவைத்த அந்தப் பாட்டியையே ஒரு அமாவாசை வந்து அழைத்துப் போய்விட்டது. இதை மனோதத்துவ நிபுணர்களே ஒத்துக் கொள்வார்கள். புத்திசுவாதீனம் இல்லாதவர்கள் இம்மாதிரியான நேரத்தில் வழக்கத்தைவிட கொஞ்சம் அதிகமாக நடந்துகொள்வார்கள்.

வழக்கமாக என்னை வந்து பார்க்கும் ஒரு சிநேகிதன் ஒரு நாள் வரவில்லை மறுநாள் அவனைப் பார்த்து "ஏன் நேற்று வரவில்லை?" என்று கேட்டேன். "நேற்று பௌர்ணமி அதனால் உன்னிடம் வர வேண்டாம் என ஒதுங்கியிருநதேன்" என்றான்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## வாழைப்பழங்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு நடவடிக்கை

(கொழும்பு)

வாழைப்பழங்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதர்கான சந்தை வாய்ப்பை உள்ளூர் உற்பத்தியாளர்கள பெற்றிருக்கின்றனர்.

இது தொடர்பான வழிகாட்டல்களை ஏற்றுமதி அபிவிருத்திச்சபை வழங்கி வருகின்றது.

இலங்கையிலிருந்து வாரம் ஒன்றுக்கு ஆயிரத்து 200 கிலோ கதலி வாழைப் பழத்தை இறக்குமதி செய்வதற்கான கோரிக்கையை ஜப்பான் அனுப்பி வைத்திருக்கின்றது. அத்துடன் ஐரோப்பிய நாடுகள் மற்றும் மத்திய கிழக்கு நாடுகள் கப்பல் வாழைப்பழம், கதலி வாழைப்பழங்களை இறக்குமதி செய்வதற்கான கோரிக்கையை விடுத்துள்ளனர்.

இதற்கமைய வாழைப்பழங்களை பொதி செய்வதிலும் அவற்றின் தரங்களைப் பேணுவதிலும் கூடிய கவனம் செலுத்தப்பட வேண்டும் என ஏற்றுமதி அபிவிருத்திச்சபை அறிவுறுத்தியுள்ளது.

மேலும் இதன்மூலம் நாட்டில் உள்ள வாழைப்பழ உற்பத்தியாளர்கள் பெரும் நன்மையடையவுள்ளதுடன, வாழைப்பழச்செய்கையும் எதிர்காலத்தில் அதிகரிக்க வாய்ப்புள்ளதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது. (ற-5)

# புலிகளின் அழைப்பை ஏற்று பேச்சை உடன் ஆரம்பிக்குக!

## பிரதியமைச்சர் செல்லச்சாமி வேண்டுகோள்

(கொழும்பு)

நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் தனது மாவீரர்தின உரை மூலமாக மீண்டும் அழைப்பு விடுத்துள்ளார்.

அது சர்வதேச சமூகத்தால் வரவேற்கப்பட்டுள்ளது. அதனையே இலங்கையில் உள்ள சகல மக்களும் விரும்புகின்றார்கள் எனவே தமிழ்மக்களின் விடிவுக்காக விடுத்த அந்த அழைப்பை எல்லா சமூகங்களும் ஏற்று நாடடை அதன் பாதாளத்திலிருந்து மீ்க வேண்டும் என பிரதியமைச்சர் எம்.எஸ்.செல்லச்சாமி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை பாராளுமன்றத்தில் நடைபெற்ற பாதுகாப்பு அமைச்சு மற்றும் மக்கள் பாதுகாப்புச் சட்டம், ஒழுங்கு அமைச்சுக்கான நிதியொதுக்கீட்டு விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் அங்கு உரையாற்றுகையில், நாட்டின் பொருளாதாரத்தை மீட்சியடையச் செய்வது அவசியம். ஆனால் அதற்கு முன்னர் அனைவரும் விரும்பும் நிரந்தர சமாதானத்தை நாட்டில் உருவாக்காக வேண்டும்.

இதனாலேயே உயரிய பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்த முடியும். ஆகையால் சமாதான நடவடிக்கைகளை உடனடியாக ஆரம்பியுங்கள. இதற்கு சகல அரசியல் கட்சிகளினதும் உதவியோடு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸும் தனது பூரண ஆதரவினை வழங்கும். இதில் எதுவித மாற்றுக் கருத்துக்கும் இடமில்லை.

இந்த நாட்டில் நிரந்தர சமாதானம் ஒன்று ஏற்படுத்தப்படும் வரை எவ்வித அபிவிருத்திப் பணிகளையும் வெற்றிகரமாக முன்னெடுக்க முடியாது என அனைவரும் உணர்ந்துகொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார். (ற-4)

# தனியார் வைத்தியசாலைகளைக் கட்டுப்படுத்த விஷேட சட்டமூலம் சமர்ப்பிக்கப்படவுள்ளது

(கொழும்பு)

இலங்கையில் இயங்குகின்ற தனியார் மருத்துவமனைகள் மற்றும் சிகிச்சை நிலையங்கள் கடைப்பிடிக்கப்பட வேண்டிய நடைமுறைகள் மற்றும் வழிமுறைகள் என்பன அறிமுகம் செய்யப்படவுள்ளன.

சுகாதார அமைச்சின் தனியார்துறை வைத்தியப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி அமல் ஹர்ஷா எஸ்.பி.சில்வா இதுவிடயம் குறித்துக் கருத்துத் தெரிவிக்கையில்,

இநத விடயம் தொடர்பாக விஷேட சட்டமூலம் ஒன்று விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. நாட்டின் சனத்தொகையில் 60 சதவீதத்தினர் தனியார் வைத்தியசாலைகளுக்கே சென்று சிகிச்சை பெற்று வருகின்றனர்.

நாடளாவிய ரீதியிலுள்ள 174 தனியார் வைத்தியசாலைகளில் வைத்தியர் அடங்கலாக சுமார் ஒரு இட்சத்துக்கும் மேற்பட்ட சுகாதார ஊழியர்கள் சேவையாற்றி வருகின்றனர்.

இதற்கு மேலதிகமாக ஆயிரத்து 600 தனியார் சிகிச்சை நிலையங்களும் செயற்பட்டு வருகின்றன.

உத்தேச சட்டத்தின் அடிப்படையில் நாட்டில் இயங்குகின்ற தனியார் வைத்தியசாலைகள் அனைத்தும் ஒழுங்கான தரப்படுத்தல் முறையின் கீழ் ஒழுங்காகத் தரப்படுத்தப்படும் நாட்டில் நவீன வசதிகளைக் கொண்ட நான்கு பாரிய தனியார் வைத்தியசாலைகளை நிறுவுவதற்கு வெளிநாட்டு முதலீட்டாளர்கள் விருப்பம் தெரிவித்துள்ளனர். இதன்மூலம் சுமார் ஆயிரக்கணக்கானோருக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கவுள்ளதுடன், இலஙகையின் சுகாதாரத் துறையின் வளர்ச்சியும் மேம்படும் எனவும் குறிப்பிட்டார். (ற-5)

# இராசிபலன்

**09.12.2004**
**(கார்த்திகை 24, வியாழக்கிழமை)**
**துவாதசி பிற்பகல் 01.09 மணிவரை**
**சுவாதி பிற்பகல் 05.32 மணிவரை**
**இராகுகாலம் 01.49-3.19 மணிவரை**
**சுபநேரம் 07.49- 9.19 மணிவரை**
**அமிர்தசித்தம், பிரதோச விரதம்**
**விநாயகர் விரதம் 13ஆம் நாள்**

**மேடம்** வாகன வசதி, கௌரவமான நிலை, பண வருவாய், போசன சுகம்.

**இடபம்** திடீர் பயணம், சுகவாழ்வு, செய்தொழில் முன்னேற்றம், புதிய சிந்தை.

**மிதுனம்** வியாபார நன்மை, காரிய இடையூறு, மனச்சஞ்சலம், சொத்துப்பிணக்கு.

**கடகம்** கல்வியில் ஆர்வம், பயநத சுபாவம், ரோகநிலை, காரிய தாமதம்.

**சிங்கம்** உறவினர் சந்திப்பு, தொழில் நன்மை, இனிய சுபாவம், காரிய நன்மை.

**கன்னி** அதிக வார்த்தை, மதிப்புக் குறைவு, முயற்சி தாமதம், திடீர் நன்மை.

**துலாம்** பெரியோர்ஆசி, ஆழ்ந்த சிந்தை, சயனசுகம், எடுத்தகருமங்கள் கைகூடும்.

**விருச்சிகம்** உஷ்ண வியாதி, பிரயாணம், எதிர் பாரத நன்மை, நித்திரைக்குறைவு.

**தனுசு** தொழில் சிந்தை, மனமகிழ்ச்சி, புகழ், பொருள் வரவு,

**மகரம்** சுபநிகழ்ச்சி, பிறர் உதவி, காரிய அனுகூலம், பிரயாண நன்மை.

**கும்பம்** அபகீர்த்தி, ஆன்றோர் ஆசி, உடல் உழைப்பு, வீண்பயம்.

**மீனம்** வீண் தொல்லை, உடல் வியாதி, பிரயாணபயம், காரிய இடையூறு.

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது - வளவன்

## மனித உரிமைகள் தினம்

(கிளிநொச்சி)

வடக்கு -கிழக்கு மனித உரிமைகள் செயலகத்தின் முதலாவது மனித உரிமைகள் தினம் நாளை வெள்ளிக்கிழமை கிளிநொச்சி ஏ-9 பிரதான வீதிக்கருகில் அமைந்துள்ள இந்து கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தேசிய சர்வதேச ரீதியில் மனித உரிமைகள் அடிப்படைச் சுதந்திரங்கள் என்பவை தொடர்பான அறிவை மேம்படுத்தவும் அவற்றுக்கு மதிப்பளிக்கவும் தனிநபர், குழுக்கள், நிறுவனங்கள் ஆகியவற்றுக்குள்ள உரிமையையும் பொறுப்பையும் ஏற்று வடக்கு-கிழக்கிலுள்ள மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் குழுவொன்றினால் உருவாக்கப்பட்டதே வடக்கு-கிழக்கு மனித உரிமைகள் அமைப்பு. வடக்கு-கிழக்கிலுள்ள அனைவரதும் மனித உரிமைகளையும் பாதுகாப்பு மேம்பாடு ஆகியவற்றை நோக்கங்களாகக் கொண்டதுமான இந்த அமைப்பு கடந்த ஜூலை மாதம் 9ஆம் திகதி அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

வண.பிதா கருணாரட்ணம் தலைமையில் பாராளுமன்ற உறுப்பினர்களான ஜோசப்பரராஜசிங்கம், கஜேந்திரன் மற்றும் யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தைச் சேர்ந்த டாக்டர் சிவபாலன், யாழ் பல்கலைகழகத்தைச் சேர்ந்த செல்வி அருளானந்தம், புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன், டென்மார்க்கைச் சேர்ந்த டாக்டர் சிறீஸ்கந்தராஜா, நியூஸிலாந்தைச் சேர்ந்த மனித உரிமைகள் செயற்பாட்டாளர் டாக்டர் மாலதி ஆகியோர் இந்த அமைப்பின் செயற்குழு அங்கத்தவர்கள் ஆவர்.

அண்மையில் இந்த அமைப்பின் யாப்பு விதி முறைகளைத் தயாரிப்பதற்கு ஜோசப் பரராஜசிங்கம் தலைமையிலான குழுவினர் ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்று அங்குள்ள தமிழ் சட்ட நிபுணர்களின் ஆலோசனைகளைப் பெற்றிருந்தனர். தற்போது இந்த அமைப்பின் யாப்பு வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-4)

## எஸ்.பி. திஸநாயக்கவின் இடத்துக்கு ரேணுகா ஹேரத்?

(கொழும்பு)

உயர்நீதிமன்றத்தை அவமதித்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் இரண்டு வருட கடூழியச் சிறைத தண்டனை விதிக்கப்பட்டுள்ள எஸ்.பி. திஸநாயக்கவின் பாராளுமன்ற உறுப்பினர் பதவி வெற்றிடத்துக்கு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரேணுகா ஹேரத் நியமிக்கப்பட இருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கடநத பொதுத்தேர்தலில் நுவரெலியா மாவட்டத்தில் வாக்கு எண்ணிக்கையின் அடிப்படையில் எஸ்.பி.திஸநாயக்கவுக்கு அடுத்ததாக ரேணுகா ஹேரத் இருந்தார்.

எஸ்.பி.திஸநாயக்க அடுத்து வரும் 7 வருடங்களுக்கு எந்தவொரு தேர்தலிலும் போட்டியிட முடியாது. இது குறித்து முன்னாள் பிரதமரும் தற்போதைய எதிர்கட்சித்தலைவருமான ரணில் விக்கிரமசிங்க, திஸநாயக்கவின் மனைவியுடன் கலந்துரையாடியுள்ளார்.

சிலவேளை, எஸ்.பி.திஸநாயக்கவின் பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்கு அவரது மனைவி வரக்கூடிய வாய்ப்புகள் இருப்பதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. இதேவேளை, எஸ்.பி.திஸநாயக்க போட்டியிட்ட தேர்தல் தொகுதியான ஹிங்குராங்ஹொட பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. (ற-5)

# சந்திரிகா 3 ஆவது தடவையும் ஜனாதிபதியாகவர கடும் முயற்சி

## ஜீ.எல்.பீரிஸ் மக்கள் புரட்சி வெடிக்கும் என எச்சரிக்கை

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமார துங்க அரசியல் அமைப்பை



மாற்றம் செய்து, மூன்றாவது தடவையாகவும் ஜனாதிபதிப் பதவியைக் கைப்பற்றும் நோக்கில் முழுமுனைப்புடன் செயற்பட்டுவருவதாகப் பாராளுமன்ற உறுப்பினரும், ஐக்கிய தேசியக்கட்சியின் ஊடாகப் பேச்சாளருமான பேராசிரியர் ஜ.எல். பீரிஸ் குற்றம் சாட்டியுள்ளார்.

எதிர்க்கட்சித்தலைவரின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக்கட்சி மக்களுக்கு மூன்றுவேளை உணவைத் தருவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டுவரும் இந்தத் தருணத்தில், ஜனாதிபதி மூன்றாவது முறையாகவும் ஜனாதியாவதற்கான முழு முயற்சியில் ஈடுபட்டுவருகின்றார்.

ஜனாதிபதியின் இம் முயற்சியை முறியடிக்க நாம் ஆதரவாளர்களுடனும், மக்களுடனும் வீதிப்போராட்டங்களில் ஈடுபடவுள்ளோம்.

எப்படியிருந்த பொழுதிலும் நாடு எதிர்நோக்கும் தேசியப் பிரச்சினைகளை அரசு இதய சுததியுடன் தீர்க்க முன்வருமானால் அதற்கான ஆதரவினைத்தர ஐக்கிய தேசியக்கட்சி தயாராகவே இருக்கின்றது.

ஆனால், ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களுக்கு எதிராகப் பழிவாங்கும் நடவடிக்கைகளில அரசு ஈடுபடுமானால் எம்மிடம் இருந்து எந்தவிதமான ஆதரவினையும் எதிர்பார்க்க முடியாது என்றும் பீரிஸ் மேலும் தெரிவித்தார். (இ-4)

## வட-கிழக்கில் வெள்ள அனர்த்தம்;

# அகில இலங்கை தமிழ்விழா ஒத்திவைப்பு

## எதிர்வரும் ஜனவரியில் நடைபெறலாம்

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்டுள்ள வெள்ள அனர்த்தம் காரணமாக அகில இலங்கைத் தமிழ் மொழித் தின விழா ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகக் கல்வி அமைச்சின் மொழிப் பிரிவுப் பணிப்பாளர் நல்லதம்பி நடராஜா அறிவித்துள்ளார்.

எதிர்வரும் 27,28 ஆம் திகதிகளில் கொழும்பு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் இவ்விழா நடைபெறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

வடக்கு- கிழக்கில் ஏற்பட்டுள்ள மழைவெள்ளம் காரணமாக பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ள நிலையில், அகில இலங்கை தமிழ்தொழித்தின விழா நடாத்துவது சாத்தியப்படாது என அவர் தெரிவித்தார்.

இதேவேளை, தைப்பொங்கல் விழாவிற்குப் பின்னர் இவ்விழாவை நடாத்துவது எனவும், அதற்குரிய பொருத்தமான திகதியும் இடமும் பின்னர் அறிவிக்கப்படும் எனவும் அவர் மேலும் அறிவித்துள்ளார். (ற-5)

## மலையக கல்வி அபிவிருத்திக்கு

# பிரபாகரனின் நிதியத்திலிருந்து ஒரு கோடி ரூபா நிதி ஒதுக்கீடு !

(கொழும்பு)

எவ்வித அபிவிருத்திப் பணிகளுமின்றி மாற்றான் தேசம் போலப் புறக்கணிக்கப்பட்டு வரும் மலையக மக்களின் கல்வி அபிவிருத்திக்கென விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரன தனது நிதியத்தில் இருந்து ஒரு கோடி ரூபா நிதியை ஒதுக்கியுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் பாராளுமன்றில் நடைபெற்ற தோட்ட வீடமைப்பு, உட்கட்டமைப்பு மற்றும் சமூக அபிவிருத்தி அமைசசுக்கான நிதியொதுக்கீட்டு விவாதத்தின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் இது பற்றித் தெரிவிக்கையில்,

மலையக மக்களின் அபிவிருத்திக்கு முன்னுரிமை வழங்கப்படவில்லை. ஆனால் அமைதி நிலவிவரும் இவ்வேளையில் பாதுகாப்பு அமைச்சுக்குப் பல கோடிக்கான ரூபாய்களை அரசு ஒதுக்கியுள்ளது.

இந்த நிதி ஒதுக்கீடு எதற்காக இக் காலத்தில் பயன்படுத்தப்படபோகின்றது எனக் கேள்வி எழுப்பினார்.

மலையக மக்களின் அடிப்படை உரிமைத் தேவைகளுக்கு அன்றிலிருந்து, இன்றுவரை மாறி மாறி ஆட்சிக்கு வரும் எந்தவொரு அரசாங்கமும் முன்னுரிமை வழங்கிப் பூர்த்திசெய்யப்படவில்லை.

மாணவர்களின் கல்விக்குப் பூரண உதவி வழங்கப்படவில்லை, பாடசாலைகள் புனரமைக்கப்படவில்லை, போதியளவு சம்பள உயர்வு வழங்கப்படவில்லை.

இப் பகுதிகளில் திருமணப் பதிவுகளிலிருந்து அடையாள அட்டை பெறும் படிவம் வரை அனைத்தும் சிங்கள மொழியிலேயே உள்ளன.

அங்குள்ள தமிழ்ப்பாடசாலைகளில் சிங்கள தலைமை ஆசிரியர்கள் பொறுப்பு வகிக்கின்றனர்.

இவ்வாறான நிலமைகள் இனியும் தொடரக் கூடாது. இதிலிருந்து அவர்கள் விடிவுபெற வேண்டும்.

மலையக மக்களின் முழு அபிவிருத்திப் பணிக்குமென இவ் 'அரசாங்கத்தினால் 9 கோடி ரூபாவை மட்டும்' ஒதுக்கியுள்ளது.

ஆனால் விடுதலைப் புலிகளின் தலைவரினால் மலையக மக்களின் கல்வி அபிவிருத்திக்கு மட்டும் ஒரு கோடி ரூபா நிதியை ஒதுக்கியுள்ளார்.

இலங்கையின் இருதசாப்த காலமாக இடம்பெற்று வரும் இனப்பரச்சினைக்குத் தீர்வொன்று காணப்படும் போது மலையக மக்களுக்கு சுயாட்சி வழங்கக் கூடியதன் தீர்வு வழங்கப்பட வேண்டும். அவர்கள் தம்மைத் தாமே ஆளக்கூடியவர்களாகத் தனித்துவமானவர்களாக இருக்கவேண்டும்.

இது அவர்களின் எதிர்க்காலக் கனவாக இருக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார். (க-4)

# வடக்கு-கிழக்கிலும் திறந்த பாடசாலை

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் கல்வி, விஞ்ஞான, கலாசார மன்றத்தினால் பிரகடனம் செய்யப்பட்டுள்ள '2015 ஆம் ஆண்டுக்குள் யாவருக்கும் கல்வி' என்னும் திட்டத்திற்கு அமைய தேசிய கல்வி நிறுவகம் அடுத்த ஆண்டு முதல் நாட்டில் திறந்த பாடசாலை முறையை அறிமுகம் செய்யத்திட்டமிட்டுள்ளது.

இத்திட்டத்திற்கு அமையத் தேசியக் கல்வி நிறுவனத்தினால் பயிலுநர் ஆசிரியர்களைப் பயிற்றுவிப்பதற்காக உருவாக்கப்பட்ட தொலைக்கல்வி மத்திய நிலையங்கள் யாவும் திறந்த பாடசாலைகளாக மாற்றி அமைக்கப்படும்.

அத்துடன், இந்தத் திறந்த பாடசாலைகளில் வயது வித்தியாசமின்றி சகலரும் கல்வி கற்க முடியும். இதற்காகக் கட்டணம் எதுவும் அறிவிக்கப்படமாட்டாது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திறந்த பாடசாலைகள் கண்டி, கொழும்பு, குருணாகல், அனுராதபுரம், பதுளை உடபட வடக்கு-கிழக்கு மாகாணத்தின் சகல மாவட்டங்களிலும் 2005 ஆம் ஆண்டு முதல் அமைக்கப்படவுள்ளதாகத் தேசியக் கல்வி நிர்வாக உயர் அதிகாரியொருவர் தெரிவித்தார். (க)

# சூத்திரதாரியை மக்கள் இனங்காண்பார்கள்

(மட்டக்களப்பு)

தனது வியாபார நிலையம் மீது மேற்கொள்ளப்பட்ட கைக்குணடுத் தாக்குதல் சம்பவத்தின் சூததிரதாரிகளையும் அதன் பின்னணியையும் மக்கள் அடையாளம் காணபார்கள் என ரெலோ அமைப்பின் செயலாளர்நாயகம் பிரசன்னா இந்திரகுமார் கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் தனது வியாபார நிலையம் மீது இனந்தெரியாத நபர்களினால் மேற்கொள்ளப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலில் சுமார் 2 இலட்சம் ரூபா வரை இழப்பு ஏற்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.

இந்த சம்பவம் தொடர்பாக செய்தியாளர்களுக்கு மேலும் கருத்து வெளியிடுகையில் தமிழ்த் தேசியத்திற்கான 'அரசியல் கொள்கைக்கு எதிரான சக்திகளினால விடுக்கப்பட்ட எச்சரிக்கையாகவே இதனைத்தான் கருதுவதாகவும் கூறினார்.

இதற்கு யார் பொறுப்பு? இதற்கான பின்னணி என்ன? என்பதை நான் கூறுவதைவிட மக்கள் அதுணை நன்கு அறிவார்கள் என்றார். ஏற்கனவே இரண்டு தடவைகள் தனது இந்த வியாபார நிலையம் மீது கைக்குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டதையும் அவர் நினைவுபடுத்தினார். (க)

## கோப்பாய் பிரதேச செயலகத்தில்

# சுற்றாடல் விழிப்பூட்டல் திட்டம் குறித்த கருத்தரங்கு

கோப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் கிராமிய மட்ட சுற்றாடல் குழுக்களுக்கான விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

இன்று மு.ப.9.00 மணிக்கு நடைபெறவுள்ள இக் கருத்தரங்கில் பிரதேச கிராம அலுவலர்கள் கூட கிராமியப் பிரச்சினைகளையும் அதற்கான தீர்வுகள் பற்றியும் கலந்துரையாடவுள்ளனர்.

இதில் பிரதேச செயலர் திருமதி அஞ்சலி சாந்த சீலன் கலந்து கொள்ளவுள்ளார். (ப-74)

# நாவலர் குருபூஜை தினத்தில் பிரசங்கிகளுக்குப் பாராட்டு

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் யாழ்.மாவட்ட அலுவலகம் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் ஞான யாகமாகச் சொற்பொழிவு செய்தவர்களைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை நாலவர் குருபூஜை தினத்தன்று நடைபெற்றது.

இவ் வைபவத்தில் 34 சொற்பொழிவாளர்கள் கௌரவிக்கப்பட்டார்கள். யாழ்ப்பாணம் மாநகரசபை ஆணையாளர் க.குணராஜாவும் நல்லை ஆதீன முதல்வரும் சொற்பொழிவாளர்களுககுப் பொனனாடை போர்த்திச் சான்றிதழ் கொடுத்துக கௌரவித்தார்கள்.

நாவலர் பெருமானுடைய சிந்தனையில உருவாகிய சைவப் பிரசாரகர் பயிறசித் திட்டத்தைச் செயற்படுத்தும் ஓர் நிகழ்வாக இவ வைபவம் காணப்பட்டது. (ப)

# அரசியல் பணிமனை மீதான தாக்குதல்

## — பாரிய போர் நிறுத்த மீறலாகும் —

## மட்டு.அம்பாறை அரசியல்துறை கண்டனம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் நகர அரசியல் பணிமனை மீது மேற்கொள்ளப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலானது போர் நிறுத்த மீறல் என விடுதலைப் புலிகளின் மட்டு.அம்பாறை அரசியல்துறை வன்மையாகக் கண்டனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அவர்கள் விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளியிடப்பட்டுள்ள மேற்படி அறிக்கையில்,

மட்டக்களப்பு மாவட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் நகர அரசியல் பணிமனை கடந்த திங்கட்கிழமை அதிகாலை 1.20 மணியளவில் தீய சக்திகளின் குண்டுத்தாக்குதலில் இலக்காகியுள்ளது. தொடர்ச்சியாக நான்கு குண்டுகள் வீசப்பட்டுள்ளன. இதன்போது அலுவலகம் முற்றாகச் சேதமடைந்துள்ளது.

குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்படும்போது மட்டு நகர அரசியல்துறைப் பொறுப்பாளர் அன்புமாறன் மற்றும் நகரத்தில் அரசியல் பணிபுரியும் போராளிகள் அனைவரும் அங்கு இருந்துள்ளனர். கட்டடம் சேதமடைந்த போதும் அவர்களுக்கு எந்தவிதமான சேதங்களும் ஏற்படவில்லை.

மற்றும், இக்குண்டுத் தாக்குதலினால் பணிமனையின் கதவுகள், யன்னல்கள், யன்னல் கண்ணாடிகள் என்பன முற்றாக சேதமடைந்துள்ளன. இதற்கு முன்னரும 20.11.2004 அன்று இப் பணிமனை தீயசக்திகளினால் மேற்கொள்ளப்பட்ட குண்டு வீச்சுத தாக்குதலுக்கு இலக்கானது என்பது குறிப்பிடத்தக்கது.

இவ அலுவலகமானது பொலிஸ் நிலையத்திலிருந்து 50 மீற்றர் தூரத்திலும், இராணுவப் படைத் தரப்பின் முற்றுமுழுதான இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலும் அமைந்துள்ளது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

இவ்வகையான தீய சக்திகளின் செயற்பாடுகள் எதிர்காலத்தல் நடைபெறாவண்ணம் தடுத்து நிறுத்துவதற்காக படைத் தரப்பினரின் ஒத்துழைப்பானது இங்கு அவசியமானதாகும். இவ்வகையான சம்பவங்கள் நன்கு திட்டமிடப்பட்டு நடத்தப்படுகின்றமையினால் இதை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இச் சம்பவத்தை நாங்கள் இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்கும் அறிவித்துள்ளோம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-4)

# மீள் பார்வை

# யாழ்ப்பாணத் தமிழரசர் வரலாறும் காலமும்

வேலணை பண்டிதர் பொ.ஜெகந்நாதன்

3

## 03. வைபவமாலை நூலமைப்பு

இவ் வைபவமாலை யாழ்ப்பாணத் தமிழ் அரசர் காலத்தினையறிய ஒரு முக்கியமான நூல் இந்நூலைப்பற்றியும் இந்நூலில் நாம் எடுத்தாளும் ஆதாரங்களைப் ப்பற்றியும் அறிந்தாற்றான் உண்மையை அறிந்து கொள்ளமுடியும். ஒருவன் ஒரு செய்தியை ஒரு சம்பவத்தைத் தான் நேரடியாகக் கண்டறியலாம். அவன் வாழ்வும் ஒரு நூறாண்டு என்று வைத்துக் கொள்வோம் அன்றியும் அவன் முற்பட்ட சங்கதிகளை தந்தை அவன் தந்தையாகிய முன்னோர் தாம் கேட்டறிந்தவைகளை அவனுக்குச் சொல்லும் கர்ணபரம்பரையைக் கேட்டறியலாம். அவ்வாய்ப்பும் அவனுக்கு 50 ஆண்டுவரை முற்பட்டவைகளாகத்தான் இருக்க முடியும். எனவே ஒருவன் தன்காலத்து 150 ஆண்டுவரை பழமை வரையுள்ள செய்திகளை பிறர்க்குச் சுட்டியுரைக்கும் போது அவ்விஷயத்தை நான் கண்டடேன், கேட்டேன் கர்ணபரம்பரைக் கதைமூலம் கேட்டேன் ஏன்று சொல்லலாம்.

இந்த 150 அல்லது 200 ஆண்டுகளுக்கு முற்பட்ட செய்தியை ஒருவன் பிறர்க்கு எடுத்துரைக்கும் போது அந்த செய்தியை அல்லது உண்மையை சிவாசனத்தையோ புதைபொருளையோ, எவ்வகைச் சுவடியாகவோ, நூலாகவோ ஆதாரம் காட்டாமல் வாளாதம் வாயாலே சொல்லலாமே சொன்னால் அதில் உண்மை இருக்கும் என்று நம்பலாமோ. எப்படி அவரால் ஆதாரம் இல்லாமல் காணமுடியும்.

ஆதாரம் இல்லாதவைகளை எப்படி உண்மை இருக்குமென்று நம்பமுடியும். இப்படித்தானே ஆராய்ச்சிக்காரர் சிலர் வாளாதம் வாயாதாரமாகச் சொல்லி இருக்கிறார்கள். அதனாலேதான் சிக்கல்கள் அதிகம் உண்டாயின. இவ்வைபவமாலை ஒல்லாந்த மன்னனுக்கு தமிழரசர் காலச் சம்பவங்களை அறியும் பொருட்டாக எழுதப்பட்ட ஒரு சிறந்த நூல். இந்நூல் தனக்கு முற்பட நிகழ்ந்த பல சங்கதிகளைச் சொல்லியுள்ள பல ஆதார நூல்களில் இருந்து விஷயங்களைச் சேர்த்துக் கொண்டு திரட்டி எழுதப்பட்டது. என்க இவை எதிர்கால மக்களுக்கு உண்மையைச் சொல்லி வைக்க வேண்டும் என்னும் ஆசையோடு எழுதபடுபவை. அவைகளை எழுதும் ஆக்கியோன் பொய்யோ புனைவோ அற்பமேனும் அவற்றுள் இருக்க விரும்பான். முக்குண வயத்தான் முறை பிறழ்ந்துரைத்தல் மக்கள் இயற்கை என்பவாகலின் ஒரேவழி முக்குண வயப்பட்டு அவன் வாக்கில் தற்செயலாகப் பிழை நேரலாம் ஆராய்ச்சிக்காரன் தன் அறிவாற்றலாலும் ஆராய்ச்சித் திறத்தாலும் பிற நூல்களின் உதவியாலே அப்பிழைகளைக் கண்டு கொள்ள முடியும்.

அங்ஙனமே வாய்மையாயின் என்ன? பிறர் போர்த்துக்கேயர் வரலாற்றினை வைபவமாலையார் சொன்ன வகையிலே குறை சொன்னார் எனின் வைபவமாலையார் போர்த்துக்கேயர் வரலாறு சொல்ல எடுத்துக்கொள்ளவில்லை என்க. காரணம் போர்த்துக்கேயர் வரலாற்றைச் சொல்லும்படி ஒல்லாந்த மன்னன் கேட்கவில்லை போர்த்தர் அண்டைநாடாக இருந்ததாலும் அவர் வரலாறு அவர்களே தெரிந்து கொண்டிருந்திருப்பார். பாதர் குவிரேஸ் போர்த்தர் படையோடேயே வந்து முன்னரே அந்நூலை எழுதியிட்டார். ஆதலாலும் (அன்றியும் அந்நூல் அப்பொழுது போர்த்தர் போருக்குப் படையனுப்பி வைத்த கோவைத் தேசாதிபதிக்கு அவர் மேலதிகாரப் பொறுப்புடையவராய் இருந்தமையின் இவர் அவர்க்கு எடுத்துச் சொல்லும் பொறுப்புடையவராய் இருந்தே அந்நூலை எழுதி அங்ஙனம் பின்னர் அவர்க்கே சொல்லி அந்நூலை அவர் முன்னிலையிலேயே அரங்கேற்றினார். ஆதாலும் என்பது அந்நூற்சரிதம்) முற்றிலும் இனத்தால், தூரத்தால், பாஷையால், சமயத்தால், உருவத்தால், கலாசாரத்தால், நாகரீகத்தால் தம்மிலும் வேறுபட்ட தமிழரசர் ஆட்சிமுறையை அவர்கள் வரலாற்றை அறியத்தான் ஒல்லாந்தர் சொல்லும்படி கேட்டார் என்க. எனவே மேக்கறூன் என்றேனும் ஒல்லாந்த மன்னன் மயில்வாகனப் புலவரைச் சொல்லும்படி கேட்டது தமிழரசர் வரலாற்றை என்க. வைபவமாலையார் சொன்னதும் தமிழரசர் கால வரலாற்றை என்க. இவ்வுண்மை இன்னும் எவ்வூறு வலியுறுத்தப்படுகிறதெனின்,

உரராசர் தொழு கழன் மேக் கறூனென் றோது
முவாந்தேச் மன்னனுரைத் தமிழாற் கேட்க
வரராச கைலாய மாலை தொன்னூல்
வரம்பு கண்ட கவிஞர் பிரான்வையா பாடல்
பரராச சேகரன் னுலாவுங் காலப்
படிவழுவா துற்றசம்ப வங்க டீட்டுந்
திரராசா முறைகளும் தேர்ந்தியாழ்ப் பாணத்தின்
செய்திமயில் வாகனவேள் செப்பி னானே"

என்னும் பாடலால் மதிப்புரை அளித்தவர் தமிழரசர் கால வரலாற்றைச் சொல்லுகின்ற கைலாயமாலை, வையாபாடல், பரராசசேகரன் உலா, இராசமுறை என்னும் நூல்களை ஆராய்ந்தே வைபவமாலையார் அவ்வாறு சொன்னார் என்று சொல்லியிருத்தலால் தேர்ந்து கொள்க. போர்த்துக்கேய வரலாற்றையுடைய எந்த நூலையும் அவர் ஆதார நூல்களாக எடுத்தார் என்று சொல்லப்படவில்லை. அவர் சொல்லவும் இல்லை என்க. அவர் நூல் எழுதியது போர்த்தர் காலத்தைக் கடந்தாதலின் தமிழரசர் காலவரலாற்றை நிறைவு செய்வான். ஆண்டைக்கு .வேண்டும் பகுதியையோ சொன்னார் என்க. அன்றியும் எதிர்காலத் தமிழர்க்கு போர்த்தகர் காலத்து நிகழ்ந்த புதுமையும் வியப்பும் நிறைந்த சில சம்பவங்களையும் தம்மார்வத்தால் கூட்டிச் சொன்னார் என்க. இஃதென்னை வியப்பு யா.வை. விகாரரரும் யா.ச. காரரும் இவ் வைபவமாலையைப் பற்றி தத்தம் நூல்களில் பல இடங்களில் கண்டித்தும் அந்நூலாசிரியர் அறிவுக்கு மாசும் மறுவுந் தோன்ற தத்தம் நூல்களில் எழுதியும் இருக்கிறார்ளே. ஆகையால் அம்மாலைகளை எப்படி உண்மைக்குறியானவை என்று சொல்ல முடியும் என்னின், இந்த யா.வை. வி.காரரும் யா.ச. காரரும் ஆராய்ச்சி முறை புரியாராய் தம்மராய்ச்சியைச செய்து கொண்ட அதனாலே அம்மாலை நூல்களின் உண்மை முடிவுகளை அவை சொன்ன படியே விளங்காமல் பிறழ்வாக விளங்கிக்கொண்டு அவ்விளக்கத்தின் அறிவையே துணை கொண்டு இம்மாலை நூல்களின் முடிபுகளை நோக்கினாராக அந்நோக்கிலே இம்மாலை நூல்கள் தான் பிழை என்று அவர்களுக்குத் தோன்றவே அவர்கள் இம்மாலை நூல்களைக் கண்டித்தார் என்க. அங்ஙனம் கண்டிப்பவர் தம்மிற்றான் பிழை இருக்க எமது அப்பிழை காரணமாகத்தான் நான் கண்டிக்கிறேன் என்று புரியாராய் கண்டித்தார் என்க. இன்னும் எங்ஙனமெனின் கண் பிழைப்பட்ட ஒருவன் ஒரு பண்டத்தைப் பார்க்கும் போது அப்பண்டத்தின் உண்மைக் காட்சி அவன் கண்ணுக்கு விகாரமாகத் தோன்றவே அவன் பண்டம் தான் பிழைத்தது என்று எழுதியவாறாம் என்க.

அங்ஙனமாயின் யா.வை. வி; யா.ச. காரர் மேலதான் பிழை, ஆம் ஆம் அவரே பிழைத்தனர் அப்பிழைகளை நூல் முடிவிலே தெரிந்து கொள்ளவரும். அவற்றை யாம் யாவரும் உணரும் வண்ணம் விளக்குவோம். அதுவரையும் இந் நூல் வழியே செல்லுக நிற்க.

இவ் வைபவமாலை யார் ஆதாரமாகக் கொண்ட நூல்களிலே இப்பொழுது இருப்பவை கைலாயமாலையும் வையாபாடலும் இல்லாதவை. (இவை சில நூற்றாண்டுகளாகவே இல்லை) பரராசகேகரனுலாவும், இராசமுறையும் ஆகையால் இருக்கிற கைலாயமாலையையும் வையா பாடலையும் நாம் வாசித்துணர்ந்துகொண்டு வைபவமாலையைப் பார்ப்போமானால் வைபவமாலை சில இடங்களிலே கொஞ்சம் கூட விவரித்துச் சொல்லுகின்றமை புலப்படும். அவை பரராசசேகரனுலா, இராசமுறை என்பனவற்றுள் அந்நூலாசிரியர் கண்டிருக்க வேண்டும் என்று முடிவு செய்து கொள்ளவேண்டும். நிற்க அவ்விரிவுகளை இந் நூலின் உட்களங்களிலே பார்க்க.

(தொடரும்)






விஞ்ஞான தினத்தை முன்னிட்டு தொண்டமனாறு வெளிக்கள நிலையம் யாழ். கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலை மாணவர்களிடையே நடாத்திய கட்டுரைப்போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கும், நேற்று இடம்பெற்ற விஞ்ஞான வினாடி வினாப் போட்டியின் இறுதி நிகழ்வில் வெற்றியீட்டிய மாணவர்களுக்குமான விருது வழங்கும் வைபவம் நேற்று யாழ். வலயக்கல்விப் பணிமனையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்ட யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், பேராசிரியர் க.சின்னத்தம்பி, விழா ஒழுங்கமைப்பாளர் திருமதி இராஜாராம் ஆகியோரையும் இதில் கலந்துகொண்ட மாணவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்: ஞா.ஐங்கரன்)

## சான்றிதழ் வழங்கல்

தேசிய அவுஸ்திரேலிய இரசாயனவியல் புதிர் போட்டி -2004 போட்டியில் பங்குபற்றிய யாழ்ப்பாண இந்துக்கல்லூரி மாணவர்களான,

செல்வன் சிவப்பிரகாசம் மயூரன் (தரம் 12) அதிவிசேட பெறுபேற்றையும், செல்வன் தளையசிங்கம் அஜந்தன்(தரம்11) -2ஆவது அதிவிசேட பெறுபேற்றையும் பெற்றுள்ளனர்.

இவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் எதிர்வரும் ஜனவரி மாதம் 28ஆம் திகதி காலை 8.30 மணிக்கு கொழும்பு 7, விஜயராம மாவத்தையில் உள்ள "வித் தியா மந்தரய" வில் நடைபெறும். (ற)

## பாடநூல்விநியோகம்

தென்மராட்சி பாடசாலைகளுக்கான இலவச பாடப்புத்தகங்களின் முதலாம் தொகுதி சாவகச்சேரி கோட்ட அலுவலகத்தில் வைத்து விநியோகிக்கப்பட்டு வருகிறது.

கைதடி,மட்டுவில், கொத்தணி பாடசாலைகளுக்கான விநியோகம நேற்று முன்தினமும் வரணி, கொடிகாமம, உசன் பாடசாலைக்கு நேற்றும வழங்கப்பட்டன. இதே வேளை, சாவகச்சேரி நகர் மற்றும் வட நகர் பாடசாலை களுக்கு இனறு நண்பகல 1.00 மணியளவில் விநியோகம செய்யப்படும் என்று கோட்டக் கல்வி அதிகாரி தெரிவித்துள்ளார். (ப-29)

## பயிற்சி

தென்மராட்சிப் பாடசாலைகளில் சிங்களம் கற்பிக்கும் ஆசிரியர்கள் மற்றும் தரம் 5 வகுப்புகளுக்கு கற்பிக்கும் ஆசிரியர்களுககான இரண்டாம் மொழி (சிங்களம்) பயிற்சி எதிர்வரும் 11,12 ஆம் திகதிகளில்காலை 9.00 மணிக்கு வரணி ஆசிரிய மத்திய நிலையத்தில் நடைபெறவுள்ளது.

5நாட்கள் நடைபெறவுள்ள இப் பயிற்சியில் பாடசாலைக்கு ஒரு ஆசிரியர் வீதம் பங்குபற்றுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ப-29)

## சேவைநலன் பாராட்டு விழா

உடுவில் மகளிர் கல்லூரி அதிபர் டாக்டர் செல்வி செல்லையாவின சேவைநலன் பாராட்டு விழா நாளை வெளளிக்கிழமை கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவர் கடந்த 45 வருடங்கள் உடுவில் மகளிர் கல்லூரியில் ஆசிாியராக, உப அதிபராக , அதிபராகப் பணியாற்றியுள்ளார்.

இவர் இம்மாதம் 31ஆம் திகதி தனது அதிபர் சேவையில் இருந்து இளைப்பாறவுள்ளார். கல்லூரியின் ஆசிரியர்கள், மாணவர்களினால் இச் சேவைநலன் பாராட்டு விழா ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. (ற)

## பரிசில் நாள்

சாவகச்சேரி நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலய பரிசில் நாள் இன்று வியாழக் கிழமை 9.30 மணிக்கு அதிபர் நா. அருட்சோதி தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக சாவகச்சேரி கோட்டக்கல்வி அதிகாரி நா. சத்தியநாதனும் சிறப்பு விருந்தினராக டாக்டர் எஸ். அருளானந்தமும் கெளரவவிருந்தினராக தென்மராட்சி கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செ. கலைவாணனும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ப-29)

## இளைஞர்குழுக்கள் அட்டகாசம் அதிகரிப்பு

மானிப்பாய்- உடுவில் வீதியில் இளைஞர் குழுக்களின் அட்டகாசம் அதிகரித்துள்ளன.

பெண்கள் மீதான சேஷ்டைகள், தீய சொற்பிரயோகம் என்று இளைஞர் குழுக்கள் கலாசாரப் பிறழ்வாக செயற்பட்டு வருவதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

குழுக்கள் குழுக்களாக சேஷ்டைகள் புரிவோர் குறித்து கலாசாரத்தைப பேணும் குழுவினரிடம் மக்கள் முறைப்பாடு செய்துள்ளனர். (ப-51)

# வலிகாமம் மேற்குப் பகுதிகளில் கட்டாக்காலி மாடுகள் தொல்லை

## விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்

(பொன்னாலை)

உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் இராணுவத்தினரால் சுவீகரித்து வைத்திருக்கும் நிலப் பகுதிகளில் இருந்து பெருமளவில் வரும் கட்டாக்காலி மாடுகள் நெற் பயிர்களை மேய்ந்து சேதப்படுத்தி வருவதாக விவசாயிகள் தரப்பில் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

வலி. மேற்கில் சுழிபுரம் திருவடிநிலை இராணுவ உயர்பாதுகாப்பு வலயத்திலிருந்து இரவு நேரங்களில் வரும் கட்டாக்காலி மாடுகளினால் நெற்பயிர்கள் பெருமளவில் சேதப்படுத்தப்பட்டு வருகின்றன.

கடந்த கால இராணுவ நடவடிககைகளின் போது; பொது மக்களால் கைவிடப்பட்டு கட்டாக்காலிகளாகத் திரியும் மாடுகளே இவ்வாறு பாதுகாப்பு வலயப் பகுதிகளில் தஞ்சம் புகுந்துள்ளன.

இவ்வாறு தஞ்சம் புகுந்துள்ள மாடுகள் அவ்வப்போது சுழிபுரம், தொல்புரம், மூளாய், பொன்னாலை ஆகிய பகுதிகளில் உள்ள விளை நிலங்களுள் புகுந்து நெற்பயிர்களை அதிகளவில் சேதப்படுத்தி வருகின்றன.

இது குறித்து உரிய அதிகாரிகளுக்கு முறையிட்டிருந்தும் எவரும் தகுந்த நடவடிக்கைகள் எதனையும் மேற்கொள்ளவில்லையென்று இப்பகுதி மக்கள் பெரிதும் கவலை தெரிவிக்கின்றனர். (ப-49)

# இலங்கையில் குற்றவியல் சட்டத்தின் கீழ்

# பிணை வழங்கல் ஓர் ஆய்வு!

சட்டத்தரணி
ச. சிவரூபன

(நேற்றைய தொடர்ச்சி)

குற்றவியல் நடவடிக்கை கோவை பிரிவு 407 பிணைகள் சட்டம் பிரிவு 9 இன்படியும் பிணையில் போதாமை பிழை, மோசடி காணப்படின் விடுவிக்கப்பட்டவர் மீள நீதிமன்றத்திற்கு கொண்டுவரப்பட்டு ஒன்றில் திருத்தப்பட்ட அடிப்படையில் புதிய பிணைப் பொறுப்புக்கு உள்ளாகலாம் அல்லது சிறைவைக்க நீதிமன்றத்திற்கு தற்துணிவு (**Discretion**) உண்டு.

குற்றவியல நடவடிக்கை கோவை பிரிவு 408 பிணைகள் சட்டம் 18 இன் கீழும் பிணை வழஙகியவர் தன்னை பிணைப் பொறுப்பிலிருந்து விடுவிக்குமாறு நீதிமன்றத்திற்கு விண்ணப்பிக்கலாம். அதன் மீது பிணை பெற்றவரைக் கொண்டு வருமாறு பிடியாணையின் கீழ் பணிக்க இதனடிப்படையில் தோன்றின் அவர் பிணைப் பொறுப்பிலிருந்து விடுவிக்கப் படுவார்.

இச் சந்தர்ப்பததில் பிணை பெற்றவரை வேறு பிணைகாரரை கொண்டு வருமாறு நீதிமன்றம் பணிக்கும் தவறின் மீள சிறையிலிடும் பிணைகாரர் தலைமறைவாயின் அவரை எந்நேரததிலும கைதுசெய்யமுடியும். இவர் நீதிமன்றத்தின் முன் கொண்வரபபட்டு வேறு பிணைகாரரை கொண்டுவரத் தவறின் மீள சிறையிலிடும்.

பிணைப் பொறுப்பிலிருந்து விடுவிக்கக் கோருபவர் அதற்குப் போதிய காரணம் காட்ட வேண்டும். இல்லாவிட்டால் நீதிமனறம் அவருக்கு தணடனை வழஙகும் நிதிசார்நிலமை இது தொடர்பில் கவனிக்கப்படும்.

குற்றம் சாட்டப்பட்டவரின் உறவினர், நண்பர், தொழில் தருனர் போன்றோர் வெகுமதியாக ஆதனம், பணம், காணி போன்றவற்றை நீதிமன்றத்தில் ஒப்படைத்து பிணை நிற்கமுடியும. பிணை நிற்பதன் நோக்கம் சந்தேகநபர் தப்பிடாமல் உறுதி செய்வதாகும்.

குற்றவியல் நடவடிககை கோவை பிரிவு 446, பிணைகள் சட்டம் பிரிவு 12 இன்படியும பிணைக்கான நிபந்தனை விதித்தலில் பிணை பெற்றவரின் பெயர், முகவரியை அழைப்பாணை விடுவதற்கு பிணை முறியில குறிப்பிடப்பட வேணடும். அழைப்பாணை வழங்கும் போது அந்த முகவரியில் ஆள் எவரும் இல்லாதவிடத்து அவ்விடத்திலேயே வைத்தல் குறித்த சந்தேகநபருக்கு அழைப்பாணை வழஙகபபட்டது போல் கருதப்படும. குறிப்பிடப்பட்ட முகவரி வேண்டுமென்றே பிழையாக வழஙகியிருப்பின் சுருக்கமுறையான விசாரணையின் பின்னர் 06 மாதத்திற்கு மேற்படாத சாதாரண சிறை அல்லது 1000/= தண்டம் அல்லது இரண்டும் விதிக்கப்படலாம்.

## பிணை வழங்கலை கையாளும்காரணிகள்

1 தலைமறைவாகி விடக்கூடிய சாத்தியம்:-

இது தொடர்பில் ஆராயும் போது பின்வரும் காரணிகளின் அடிப்படையில் சந்தேகநபர் நீதிமன்றத்தில் தோன்றுவாரா என்ற பிரச்சினை தீர்மானிக்கப் படும்.

I குற்றத்தின் தன்மை:-

குறறம் பாரதூரமானதாயின் குற்றம் சாட்டப்பட்டவர் தலைமறைவாகக்கூடிய சாத்தியம் அதிகமாகும.

II குற்றவாளியாகக் காணப்படின் அவருக்கு வழங்கப்படக் கூடிய தண்டனையின் தன்மை:-

உதாரணமாக மரணதண்டனையினால் தண்டிக்கப்படகூடிய குற்றமாயின் பிணை வழங்கும் சாத்தியம் குறைவு.

III குற்றவாளியாகக் காணக் கூடிய சாத்தியம்:-

**Queen Vs Liyanake** (65 NLR 289)

இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட 24பேர் விளக்கததின் போது பிணை. கோரி விண்ணப்பித்தனர். இங்கு குற்றம்சாட்டப்பட்டவர்கள் தண்டனைச் சட்ட கோவையின் பிரிவு 114, 115 இன் கீழான பாரதூரமான தவறுகளை செய்திருப்பதாலும் ஏனெனில் 20 வருட கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப் படக்கூடிய குற்றம் ஆகும் இங்கு குற்றம் சாட்டப்பட்டவர்களின் சமூக அந்தஸ்து, கௌரவம், இராணு கடற்படை உயர் அதிகாரிகளாக இருப்பதால் உயர்வாகவும் அவை இழக்கப்படுவது தொடர்பான தன்மையும் நோக்கபபட்டது. எனினும் குற்றம் பாரதூரமானது அதற்கான தண்டனையும் கூடியது தலைமறைவாகும் சாத்தியம் உண்டு என்பதால் பிணை மறுக்கப்பட்டது.

2 தாமதம்:-

வழக்கு விசாரணை நீண்ட காலத்திற்கு தாமதமாகும் சந்தர்ப்பததில் பிணை பெறுவதற்கான சாத்தியம் அதிகமாகும். வழக்கு தொடர்ச்சியாக ஒத்திவைக்கப்படல் ஒரு காரணி ஆகும. ஆனால் பல சாட்சிகள் விசாரிக்கப்பட வேண்டியிருப்பின் ஏற்படும் காலதாமதம் பிணை பெறுவதற்கு காரணி ஆகாது.

**Queen VS Liyanage** வழக்கில 300 சாட்சிகள்வரை விசாரிக்கப்படவேண்டியிருந்தால் ஒரு வருட தாமதம் நியாயமற்ற காலதாமதம் என கொள்ளப் படமுடியாது எனவும் அதனடிப் படையில் பிணை வழங்கப்பட முடியாது எனவும் கூறப்பட்டது.

3 குற்றத்தின் தன்மை:-

இது முழுமையான முடிவான காரணியாக இல்லாதபோதும் பிணை வழங்கல் தொடர்பில் முக்கியம் பெறுகிறது என **Prof G.L.** பீரிஸ் கூறுகிறார். இங்கு மீண்டும் மீண்டும் புரியக்கூடிய தவறான திருட்டு, கொள்ளை, மோசடி, அச்சுறுத்தல், வீடுடைத்தல் போன்றன தொடர்பில் தவறின் தன்மையால் பிணைவழங்கலைக் கட்டுபடுத்த முடியும்.

மைக்கல் பற்றிக பிலிப் என்ற வழக்கில் அற்கின் பிரபு கூறுகையில் குறறத்தின் தன்மையை கவனத்தில் எடுத்து பிணை வழங்கப்பட வேண்டும் என்றார். மீண்டும் மீண்டும் புரியப்படவில்லை எனின் பிணையை மறுக்கமுடியாது. இல்லாவிடின் பிணையை மறுக்கலாம்.

4 குற்றம் சாட்டப்பட்டவர் தொடர்பான குற்ற வரலாறு:-

குற்றம் சாட்டப்பட்டவரின் கடந்தகாலம் குற்ற வரலாறு கொணடதாக இருப்பின் பிணை மறுககப்படலாம் என மைக்கல் பற்றிக் பிலிப் என்ற வழக்கில் கூறபபட்டது. எனினும் மறுவாறாக குற்றம் சாடடப்பட்டவர் பராயம் அடையாதவராக முன்னர் குற்றம் புரியாதவராக இருப்பின் பிணையை மறுக்கமுடியாது எனலாம்.

5 சாட்சிகளின் தன்மை:-

குற்றத்தை செய்யும்போது பிடிபடல தனது செயல் சட்டப்படி சரியானது என காட்ட போதிய காரணம் இல்லாவிடின் குற்றவாளியாகக் காண சான்றுகள் அதிகமாக இருப்பின் பிணை வழங்கும் சாத்தியம் குறைவு எனலாம். பிணை வழங்குவதால் நீதிநலன் பாதிக்கப்படும் எனில் அவதானமாக செயற்படவேண்டும். மறுபுறத்தில் குற்றவாளியாக்குவதற்கு சான்றுகள் மிகக குறைவாக இருப்பின் அவருக்கு பிணை வழங்கலாம்.

லியனகே வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் இராணுவ, கடற்படை, பொலிஸ் என்பவற்றின் உயர் அதிகாரிகள் இவர்கள் தமக்கெதிரான சாட்சியங்களை மிரட்டி தம்பக்கம் சான்றளிக்க செய்யமுடியும் அல்லது சான்றளிக்க செய்யாமல் மிரடடமுடியும் இதனால் பிணை வழங்கல் உகந்ததல்ல எனப் பட்டது.

6 குற்றம் சாட்டப்பட்டவரின் நிலை:-

குற்றம் சாட்டப்பட்டவரை தடுத்துவைப்பதால் நீதிமன்றத்தின் முன் தன்னை நிரபராதி எனக காடடுவதற்கான சான்றுகளை, தகவல்களை சிறந்த வழக்கறிஞரின் உதவியைப் பெறலை, சாட்சிகளைப் பெறுவதற்கு, பணத்தை திரட்டுதல போனறவற்றை செய்யமுடியாது இருக்கலாம். இவற்றைக் கவனத்திலெடுத்து நீதிமன்றம் குற்றம் சாட்டப்பட்டவருக்கு பிணை வழங்க முடியும்.

7 குற்றம் சாட்டப்பட்டவர் எதிர்நோக்கும் ஆள்சார்ந்த கஷ்டங்கள்:-

குற்றம் சாட்டப்பட்டவரின் மனைவி, பிள்ளைகளை, குடும்ப உறவினர்களைப் பராமரிக்க வேறு ஆள் எவரும் இல்லாத போது அதன் காரணமாக பிணை வழங்கப்படலாம். இங்கு குற்றம் சாட்டப்பட்டவரின் தொழில், குடும்பநிலைமை என்பவற்றைக் கவனத்தில் எடுத்து நீதிமன்றம் அவதானமாக செயற்பட்டே பிணை வழங்க வேண்டும். குற்றம் சாட்டப்பட்டவரை தொடர்ச்சியாக தடுத்துவைத்தால் அவருக்கு உடல், உளசார் பாதிப்பு ஏற்படும் எனில் பிணை வழங்கலாம். ஆனால் குற்றம்சாட்டப் பட்டவரை தடுத்துவைத்தல சமூக நலனுக்கு அவசியமானது எனின் பிணையானது மேற்கூறிய காரணங்களின் அடிப்படையில் வழங்கப்படமாட்டாது.

தண்டாகமுவ என்ற வழக்கில் கொலைககுற்றம் சாட்டப் பட்டவரின் மனைவி, பிள்ளைகள் வேறு எவரினதும் உதவியுமற்ற வறிய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்ற ஏதுவின் மீது பிணை வழங்கப்பட்டது.

8 குற்றம் சாட்டப்பட்டவரின் முன், பின் நடத்தை:-

ஒருமுறை பிணை வழங்கி அதன் கீழான நிபந்தனையை மீறிய ஒருவருக்கு மீள பிணை வழங்க நீதிமன்றம் மறுக்கும். **A.G.Vs Mohamed Iqbal** (1989)

என்ற வழக்கில் **A** என்பவரை கொன்றமைக்கு குற்றம் சாட்டப்பட்டிருந்தார். வழககு குற்றவியல் நடைமுறைக்கோவை பிரிவு 154ன்படி நீதவானால் மேல் நீதிமன்றத்திற்கு பாரப் படுத்தபபட்டிருந்தது. மேல் நீதிமன்ற நீதிபதியிடம் பிணை கோரப்பட்டு வழங்கப்பட்டிருந்தது. எனினும் சட்டமா அதிபர் பிணையை இரத்து செய்தார். இங்கு பிரிவு 115(3)இன்படி ஒரு நபர் கைதுசெய்யப்பட்டு 3 மாதங்கள் முடிவடைய முன் பிணை வழங்க மேல்நீதிமன்றத்திற்கு அதிகாரமுள்ளது எனினும் வழக்கு ஒன்று தொடங்கப்படாத போது பிணை வழங்க முடியாது. மேற்கூறிய வழக்கில வழக்கு நடவடிக்கை தொடஙகப்படாததால் பிரிவு 115(3) இன் கீழன்றி பிரிவு 403(3)ன் படியே செயற்பட வேண்டும எனவும் ஆனால் 3 மாதம் கழிந்த பின்பும் வழக்கு நடவடிக்கை ஆரம்பிக்காது விடின் பிரிவு 115(3)ன்கீழ் பிணைவழங்க நீதவானுக்கு அதிகாரமுள்ளது.

சட்டமா அதிபர் **Vs** புஞ்சி பண்டா (1986) வழக்கில் குருநாகல் மேல் நீதிமன்றத்தினால் பிணை வழங்கப்பட்டிருந்தது. கொலைக்குற்றம் தொடர்பாக குற்றம் சாடடப்பட்டவரை முதலில் மகாவ நீதவான் சிறையிலிட கடடளை இட்டார். குருநாகல் மேல் நீதிமன்றத்தில் பின்னர் பிணைக்குச் செய்யப்பட்ட விண்ணப்பம் நிராகரிககபபட்டது. ஏனெனில் சட்டமா அதிபான் அனுமதி கிடைக்காமை ஆகும். எனினும் 2ஆம முறை பிணைக்கான விண்ணப்பத்தை ஏற்று குற்றவியல் நடைமுறைக் கோவையின் கீழ் பிணை வழங்க முடியும் எனக் கூறப்பட்டது. இதன் போது 1973ஆம் ஆண்டின் நீதி நிருவாகச் சட்டம் வலிதற்றது எனப்பட்டது.

இவ் வழக்கின் மேன்முறையீட்டில் உயர் நீதிமன்ற நீதியரசர் இராமநாதன் அவர்கள் இத்தீர்ப்பினை மாற்றி பின்வருமாறு கூறினார். குற்றவியல் நடைமுறைக்கோவை பிரிவு 109 பொலிஸ் அதிகாரி புலனாய்வைத் தொடர்ந்து நடாத்துதல் உகந்ததல்ல எனக் கருதின் சந்தேக நபரை தடுத்து வைக்க போதிய காரணம் இல்லை எனின் இதன்பிரிவு 115(2) இன் கீழ் நீதவான் பிணைக்கான கட்டளையை ஆக்க அதிகாரம உணடு. இப் பிரிவானது 15 நாட்களின் பிற்பாடு வழக்கு நடவடிக்கை ஆரம்பிக்கப்படாவிட்டால சந்தேகநபரை பிணையில் விடவேண்டும். அதாவது பிரிவு 136 (1) (**b**) இன்கீழ் பொலிஸால் நீதவானிடம் வழக்கு நடவடிக்கையை ஆரம்பிக்க போதிய சான்று இல்லாமையை குறிக்கும. இவ்வாறு சான்று இல்லாத போது சந்தேகநபரை பிணையில் விடுவித்தல் வேண்டும் என்றார்.

இங்கு "விடுதலை" "விடுவிப்பு" என்ற சொற்பதங்களின் அர்த்தத்தை புரிந்து கொள்ள வேண்டும். விடுதலை என்பது வழக்கு நடவடிக்கைகளிலிருந்து குற்றம் சாடடப்பட்டவரை அல்லது சந்தேகநபரை முற்றாக விடுதலை செய்தல் ஆகும். ஆனால் விடுவிப்பு என்பது தற்காலிமானது. அதாவது வழக்கு முற்றாக முடியமுன்னர் பிணை வழங்கி குறித்த திகதியில் மன்றிற்கு சமூகம்தர கோருதல் விடுவிப்பு ஆகும்.

மேலும் 1997ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க பிணைகள் சட்டத்தில் முன்பிணை (**Anticipatory bail**) வழங்க ஏற்பாடுகள் கூறப்பட்டுள்ளது. இதன் பிரிவு 21இன் கீழ் குற்றம் ஒன்று நடந்துள்ளதாக அறிந்து அதன் காரணமாக பிணை வழங்க முடியாத தவறாக இருந்து இது சம்பந்தமாக பொலிஸாரால் அறிவிக்கப்பட்டிருந்து தான் கைது செய்யப்பட உள்ளேன் எனக் கருதும் நபர் ஒருவா குறித்த குற்றம் நடைபெற்ற நீதிப் பிரிவுக்குட்பட்ட நீதவான் நீதிமன்றத்தில் ஒரு சத்தியக் கடதாசி மூலம் முன்பிணைக்கு விண்ணப்பித்து பிணைவழங்கப்படலாம். இதன்போது மறு தவணைக்கு விசாரணைக்கு வருமாறு நீதிமன்றம் கட்டளையிடும். அதன் போது பொலிஸ் அதிகாரிக்கும் அறிவித்தல் அனுப்பப்படும் பின்னர் விசாரணைத்திகதியன்று முன்பிணை கோரியவர் தானாக அல்லது சடடத்தரணி மூலமாக பொலிஸ் அதிகாரி தோன்றியிருந்தால் விண்ணப்பதாரியினை விசாரணை செய்து காரணங்களுடன் கட்டளையை வழங்கும்.

பிணைகள் சட்டபிரிவு 22 இன கீழ் பிணைவழங்கும்போது நீதவான் குறிதத குற்றம்சாட்டப்பட்டவரை இலஙகையை விட்டு வெளியேறாது தடுபபதற்கு அவருடைய கடவுச்சீட்டை ஒப்படைக்குமாறு கட்டளையிடலாம். இது பிணைவழங்கப் பட முடியாத தவறு தொடர்பில் பின்னர் பிணை வழங்கப் படும் போதும், முன்னர் கைது செய்யப்பட்டு அவ்வாறு கட்டளையிட்டு பிணைவழஙகியிருந்தாலும், இப்படி கடவுச்சீட்டை ஒப்படைக்குமாறு நீதிமன்றம கட்டளையிடும். இது மேற்படி பிரிவு 21 இன்கீழ் எனின் குடிவரவு குடியகலவு கட்டுப்பாட்டு அதிகாரிக்கும் நீதிமன்றம் இவரை நாட்டை விட்டு வெளியேறாது தடுககும்படி கட்டளையிடலாம்.

முன்பிணை வழஙகப்பட்டவர் மீணடும் கைதுசெய்யப்பட்டால் பிரிவு 23 இன் கீழ் மீண்டும் மீண்டும் பிணைக்கு விண்ணப்பித்து கட்டுபாடுகளுடான பிணை வழங்கப்படவேண்டும். இது தொடர்பில் பிணைகள் சட்டபிரிவு 24 இன்கீழ காலை 6 மணிக்கும் மாலை 6 மணிக்குமிடையில் பொலிஸ் நிலையத்தல் ஒப்பமிடுமாறும் கோரப் படலாம். இதன்போது மாலை 6 மணிக்கும், காலை 6 மணிக்குமிடையில் இவ்வாறு கோர முடியாது. வழக்கின் நிகழ்வுகள, சாட்சியங்களை பயமுறுத்தல், அச்சுறுத்தல், விலைக்கு வாங்குதல் கூடாது எனவும் நீதிக்கு பங்கம் விளைவிக்கக் கூடாது எனவும் கட்டுப்பாட்டினை நீதவான் விதித்து பிணைவழங்கலாம்.

பிணைகள் சட்டபிரிவு 25 இன்கீழ் அவ்வாறு பொலிஸ் நிலையத்தில் கையெழுத்து இட வராவிட்டால் அல்லது பிடியாணை (**Warrant**) பிறப்பிக்கப்பட்டிருந்தால் அவர் பொலிஸ் அதிகாரியால் கைதுசெய்யப் பட்டு அருகிலுள்ள அல்லது வழக்கு நடைபெறும் நிதிமன்றத்தில் முன்பிணை வழங்கபபட்ட நபரை கைதுசெய்து ஒப் படைக்கலாம். இது பொலிஸ் அதிகாரியின் விண்ணப்பத்தின் மீது நீதிமன்றால் வழங்கப்படும் பிணையாணை ஆகும். இதன் போது பிரிவு 26இன் கீழ் எநத நீதிமனறத்திற்கு குறித்த பொலிஸ் அதிகாரியால் விண்ணப்பம் செய்யப்பட்டதோ அந்நபரை கைது செய்ய இட்ட பிடியாணைக்கான காரணத்தை நீதவான பதிவு செய்யவேண்டும். இவரை மீண்டும் நீதவான் தடுத்து வைக்கலாம் அல்லது காரணத்தைப் பதிந்து பிடியாணையை இரததுச் செய்யலாம் அப்போது முன்னைய பிணை முறிவலுவில் உள்ளதாகக் கருதப்படும். இவையே தற்போதைய பிணை சம்பந்தமான சட்டஏற்பாடுகள் ஆகும். இங்கு பிணை பெறுதல் ஒருவடைய அடிப்படை உரிமை ஆகும் எனலாம்.

(முற்றும்)

---

## குடும்பஸ்தர் காயம்

(பொன்னாலை)

இரு குடும்பஸ்தர்களிடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறியதில் குடும்பஸ்தர் ஒருவர் தலையில் அடிபட்டு பலத்த காயங்களுக்குள்ளானார்.

இச் சம்பவம் கடந்த சனிக்கிழமை அராலி-வீசிவளவுக்குடியிருப்புப் பகுதியில் இடம் பெற்றது.

இதன்போது தம்பிராசா தருமராசா (வயது-36) எனற நபரே தலையில் பலத்த காயமடைந்து சங்கானை அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இச்சம்பவம் குறித்து வட்டுக்கோட்டைப் பொலிஸாரிடம் பாதிககப்பட்டவரின் உறவினர் முறைப்பாடு செய்திருப்பதாகவும் தெரியவருகின்றது.(க-49)

# பிடி இறுகுகிறது... இனித்தப்ப முடியாது!




காஞ்சி நகரின் சற்று ஒதுக்குப் புறமான இடத்தில் விளையாட்டு மைதானம், நிறைய மரங்கள்... என்று குளுமையான பகுதியில் இருக்கிறது மாவட்ட காவல்துறை எஸ்.பி.அலுவலகம், ஜெயேந்திரர் வழக்கை விசாரிக்கும் தனிப்படை ரீம்கள் பரபரப்பாக இயங்கிக் கொண்டிருக்கின்றன. எஸ்.பி.யின் தனி அறையில் காஞ்சிபுரம் மாவட்ட எஸ்.பி. பிரேம்குமார், திருவள்ளூர் மாவட்ட எஸ்.பி. வரதராஜு, ஏ.டி.எஸ்.பி. சக்திவேல் மற்றும் பல அதிகாரிகளின் மீட்டிங் நடந்து கொண்டிருந்தது. எஸ்.பி.அலுவலகத்தில் இருந்த பல அதிகாரிகள் முகங்களில் மெல்லிய புன்முறுவலுடன் இயங்கிக கொண்டிருக்க, அவாகளிடம் பேச்சுக் கொடுத்தோம். அப்போது கசிந்த பல பரபரப்பான தகவல்கள்:

## என்ன ஒத்துழைப்பு!

ஜெயேந்திரர் பொலிஸ் காவலின்போது பல உண்மைகளை ஒப்புக்கொண்டுவிட்டாா. வழக்கை விசாரிக்கும் ஒரு முக்கிய அதிகாரியிடம் படு காஷவலாகப் பழகும் அவா, சாவசாதாரணமாகப பல திடுக்கிடும் உண்மைகளைக கூறிவருகிறாராம். இவ்வளவு அழகாக ஒத்துழைக்கிறாரே! என்று பொலிஸுக்கே இன்ப அதிாச்சி.

## பொலிஸ் காவல் கிடைக்காதோ?

சிறையில் இருப்பது, ஜாமீனில் வெளியேவர முடியாதது பற்றியெல்லாம் அதிகம் கவலைப்படாத ஜெயேந்திரா, பொலிஸ் காவலில விசாரணைக்கு வருவதைப்பற்றி மட்டும் மிகவும் சந்தோஷமாகவே இருக்கிறாராம். 'இங்கே எல்லாமே நன்னாயிருக்கு. எனனை பொலிஸ் காவலிலே வெச்சுக்க முடியாதோ? என்று வாய்விட்டே ஒரு முறைகேட்டு விட்டாராம்.'அது முடியாது சாமி, கோர்ட் சொன்னாத்தான் சாத்தியம்' என்று பதில் சொன்னதாம் பொலிஸ்.

## தோண்டத் தோண்ட...

சங்கரராமன் கொலை விசாரணையில் தோண்டத்தோண்ட ஏராளமான பூதங்கள் கிளம்புவதைக் கண்டு பொலிஸே மிரண்டு போயிருக்கிறதாம். புதிய தகவல்கள் அனைத்தையும் பத்திரமாக சேமித்து வைககும் அதிகாரிகள், இப்போதைக்கு சங்கரராமன் கொலையில் மட்டுமே கவனம் செலுத்த விரும்புகிறார்களாம். அவாகளின் எண்ணப்படியே ஏராளமான ஆதாரங்கள கிடைத்து வருவதால் எல்லாவற்றையும் இப்பொழுதே அறிவிக்கவேண்டாம் கோர்ட்டில் கொஞ்சம் கொஞ்சமாக ரிலீஸ் செய்யலாம் என்று நினைத்திருக்கிறார்களாம்.

## மேலும் சில நடிகைகள்...

ஓர் இளம் நடிகையை விசாரிப்பது பற்றிக் கேட்டால், 'உஷ்' என்பது போல் உதட்டில் கை வைத்துச் சிரிக்கிறது பொலிஸ். 'பத்திரிகைக் கிசுகிசு பாணியில சொன்னால் பம்பர நடிகையும், அபூர்வராகம் பாடியவரும், நீலாம்பரியும எங்கள் விசாரணை வட்டத்துக்கு விரைவில் வரப் போகிறார்கள்' என்று சொன்னார் ஒரு அதிகாரி. விளைவுகளைப் பற்றிக கவலைப்படாமல் அன்று எடுக்கபட்ட சில வீடியோ காஸெட்டுகள இப்போது பூகம்பங்களாய்ச் சிக்கியிருக்கிறதாம். பெரிய இரண்டு தலைகளுக்கு நடுவே நடந்த பெண்கள் தொடாபான 'ஆப்பிள், மாம்பழ' கோட்வேர்ட் டயலாக்குகளையும் தங்களுக்குள்ளே சொல்லிச் சிரிககிறார்கள் சில அதிகாரிகள். 'டென்ஷனில் தாம்பத்ய உறவு கூடாது' என்று முன்பு ஒரு பேட்டியில் சொல்லியிருந்த கட்டிங உள்பட ஏராளமான் விஷயங்களை பொலிஸ் திரட்டி வருகிறது.

## இதில் என்ன தப்பு?

பொலிஸ விசாரணையில் பெண்கள் தொடாபான கேள்வியின போது, 'இதில் என்ன தப்பு? நான மட்டுமா செய்தேன்? அந்த... ருடன... தொடர்பு வைத்திருக்கவில்லையா?' என்று வந்த அதிரடிப் பதிலைக் கேட்டு அதிகாரிகளே ஆடிப்போனார் களாம். இதைப் போலவே பெண எழுத்தாளரைப் பற்றியும் படுமோசமான ஒரு வாாத்தையைச் சொல்லி அதிரவைத்தாராம்.

'வெகுமதி'யாகக் கிடைத்த ஒரு 'வைர நெக்லஸ்'பற்றிய விவகாரமும் பொலிஸ் பார்வையில் விழுந்திருக்கிறதாம். அப்போது நடந்த 'தாதா' பற்றிய உரையாடல், அதனைத் தொடர்ந்த இரண்டு லட்ச ரூபாய் பாிமாற்றம போன்ற புதிய விஷயங்களிலும ஆர்வம் காட்டுகிறதாம் பொலிஸ்.

## பல்டி தரும் பலன்

கதிரவன் கோட்டில் அடித்த 'பல்டி' பற்றியும் உற்சாகமாகவே இருக்கிறது பொலிஸ். எந்தவித மிரட்டலும் இன்றி 24 மணிநேர அவகாசம் கொடுத்து, முறைப்படி மாஜிஸ்திரேட் முன்னிலையில் கொடுத்த வாக்கு மூலம்தான் நிற்கும். சாட்சிகள் மாறிப் பேசுவது ஜாமீன மனுவுக்கு எதிராகவே திரும்பும் என்று சந்தோஷப்படுகிறது பொலிஸ். வாக்கு மூலத்தின் போது 'ஓ அந்த விஷயத்தை மறந்துட்டேனே' என்று கதிரவன் சொல்லிய பாயிண்ட்டுகள் எல்லாம் படுதுல்லியமாக வீடியோவில் பதிவாகி இருப்பதால், 'பல்டி எங்களுக்குப் பலனையே தரும்' என்று அடித்துச சொல்கிறதாம் பொலிஸ்.

## சூட்கேஸில் காஸெட்

ஒரு விசாரணை அதிகாரியின் சூட்கேஸ் முழுக்க ஓடியோ, வீடியோ காஸெட், சி.டி.க்கள் குவிந்திருக்கின்றன. எல்லாமே ஜெயேந்திரர் கொடுத்த வாக்கு மூலங்களாம். 'ஒவ் வொன்றும் ஒரு வெடிகுண்டு' என்று சொல்கிறது பொலிஸ தரப்பு. சொத்துக்கள மற்றும பணப்பட்டுவாடாக்களின ஆதாரபூாவமான லிஸ்ட்டையும தயார் செய்து தன் விசாரணை வலையை விரிவுபடுத்திவிட்டது பொலிஸ். 'விசாரணைப்பிடி நாளுக்கு நாள் இறுகுகிறது. இனி ஜெயேந்திரா தப்பிக்க முடியாது' என்று உற்சாகமாகச் சொல்கிறார் ஒரு விசாரணை அதிகாரி. காஞ்சிபுரம் தரப்பில் ஒரு கனத்த மௌனமே பதிலாக இருக்கிறது. இவற்றை எதிர்கொள்ளும் வழிமுறைகள் பற்றி டில்லியில் தீவிர ஆலோசனை மேற்கொள்ளப்பட்டு வருகிறதாம்.

சென்னை தி.நகர் ராமேஸ்வரம் தெருவில் ஒரு ஃப்ளாட்டிலிருக்கும் காமகோடி லீலா பொலிஸாரின் சந்தேகப் பார்வையில் சிக்கியிருக்கும் இன்னொரு பெண்மணி. இவர்தான் ரெகுலராக காஞ்சிபுரத்துக்கு விசேஷ 'கேஸட் சப்ளை' செய்தவர் என்று ஒரு தகவல். அவரது வீட்டுக்குச் சென்று லீலாவைச் சந்தித்த போது, 'ஐயோ, அத்தனையும் பொய். எங்க தாத்தா காலத்திலிருந்து நாங்கள் எல்லாம் பரமாச்சாரியார் பக்தர்கள்... என்று படபடத்தாலும் கோபுரம் படம் போட்ட சில விசேஷ சிடிக்களைக் கைப் பற்றியிருக்கிறதாம் பொலிஸ்.

(நன்றி - இணையத்தளம்)

---

தமிழகத்தின் முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆரின்

# 17 ஆம் ஆண்டு நினைவு நாளை கொண்டாட விரிவான ஏற்பாடு

(பொன்னாலை)

தமிழகத்தின் முன்னாள் முதல்வரும் நடிகருமான எம்.ஜி.ஆரின் 17ஆவது ஆண்டு நினைவு தினத்தைக் கொண்டாடுவதற்கு தமிழீழ எம்.ஜி.ஆர்.முன்னேற்றக் கழகம் ஏற்பாடுகளைச் செய்து வருகின்றது.

அந்த வகையில் எதிர்வரும் 25,26,27 ஆம் திகதிகளில் இவரது நினைவுதினத்தைக் கொண்டாட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந் நினைவு தின நிகழ்வுகள் தமிழீழ எம்.ஜி.ஆர்.முன்னேற்றக் கழகத்தின் பண்டத்தரிப்பு, வட்டுக்கோட்டை, வலிகாமம், தென்மராட்சி ஆகிய கிளைகளிலும் - முக்கிய நிகழ்வுகள் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களில் நடைபெறவுள்ளதென்றும் கழகத்தலைவர் வ.இ.செல்வக்குமார் விடுத்த செய்திக் குறிப்பொன்றில் தெரிவித்தார். (ப-49)

# திஸநாயக்கவுக்கு ஜனாதிபதி மன்னிப்பு வழங்க வேண்டும்

## மஹிந்த விஜயசேகரா எம்.பி.கோரிக்கை

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்கவுக்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மன்னிப்பு வழங்கவேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்த விஜயசேகரா கோரிக்கை விடுத்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கேட்டுக்கொண்டார்.

முன்னாள் அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்கவுக்கு நீதிபதிகளை நிநதித்தார் என்ற குற்றச்சாட்டின்பேரில் நேற்று முன்தினம் உயர் நீதிமன்றம் 2 வருட கடுழியச் சிறைத்தண்டனையை விதித்துள்ளமையை தமது கட்சி ஏற்றுக்கொள்ளாது என்று தெரிவித்த அவர்,

எஸ்.பி.திஸநாயக்கவுக்கு வழங்கப்பட்ட மேற்படி தண்டனையை ரத்துச் செய்ய ஜனாதிபதியால் மட்டுமே முடியும் எனத தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினரான மஹிந்த விஜயசேகராவின் இந்தக் கோரிக்கையை ஜனாதிபதியிடம் தான் தெரிவிக்கவுள்ளதாக அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே பாராளுமனறில் உறுதியளித்தார். (க-60)

## நிறுவுநர் தினம்

யாழ்.கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலயத்தின் நிறுவுநர் தினமும், பரிசளிப்பு வைபவமும் இன்று வியாழக்கிழமை, மு.ப.10மணிக்கு அதிபர் க.வாமதேவன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் கலநது கொள்ளவுள்ளார். (க-130)

# பஃவ்ரலின் பேச்சுப் போட்டியில் யாழ்.இந்து மாணவர் முதலிடம்

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு மனித உரிமை நல்லாட்சி, 'ஜனநாயக உரிமைகள' என்ற கருப்பொருளை அடிப்படையாகக் கொண்டு ப.ஃவ்ரல் அமைப்பு அகில இலங்கை ரீதியாகப் பாடசாலை மாணவர்களிடையே நடாத்திய பேச்சுப் போட்டியில் மாவட்ட ரீதியில் இடம்பெற்ற முதல் சுற்றுப் போட்டியில் சிரேஷ்ட பிரிவில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது.

இப்போட்டியில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலிருந்து பங்குபற்றிய மாணவர்களான க.தர்ஸணன் (சிரேஷ்ட பிரிவு), ம.அருளிலியன் (கனிஷ்டபிரிவு) ஆகியோர் முதலாம் இடங்களைப பெற்றுள்ளனர்.

இவர்களுக்கான பரிசளிப்பு 11 ஆம் திகதி சனிக்கிழமை பணடாரநாயக்க சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ற)

# அசிற் ஊற்றி காயப்படுத்திய நபர் 21ஆம் திகதிவரை விளக்கமறியலில்

(யாழ்ப்பாணம்)

குருநகரைச் சேர்ந்த நபரொருவரை அசிற் ஊற்றிக் காயப்படுத்திய குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நபர் ஒருவர் எதிர்வரும் 21 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ளார்.

கடந்த மாதம் 27 ஆம் திகதி இடம்பெற்ற மேற்படி சம்பவம் தொடர்பாக நேற்று முன்தினம் யாழ்.குற்றவியல் தடுப்புப் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட பிரஸ்தாப நபர், யாழ்.மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி இ.த. விக்னராஜா முன்னிலையில் ஆஜர்ப்படுத்தப்பட்டார்.

இதனை விசாரித்த நீதிபதி, பிரஸ்தாப நபரை எதிர்வரும் 21 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்.சிறைச்சாலை அதிகாரிக்கு உத்தரவிட்டுள்ளார். (ற-19)

# ஆசிரிய நூலகர்களின் கடமை, பொறுப்பு குறித்த சுற்று நிருபம் விரைவில் வெளியிடப்படும்

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள பாடசாலைகளில் கடமை புரியும் ஆசிரிய நூலகர்களின் கடமை, பொறுப்புகள் தொடர்பாக மாகாணக் கல்வித் திணைக்களம விரைவில் தெளிவான சுற்று நிருபம் ஒன்றை வெளியிடவுள்ளதாக வடக்கு - கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் ஆர்.விசாகலிங்கம தெரிவித்துள்ளார்.

கல்முனை ஆசிரிய மத்திய நிலையத்தில் ஆசிரியநூலகர்களுக்கான வதிவிடச் செயலமர்வுக் கருத்தரங்கில் கலந்து கொண்டு பேசியபோதே இதனைத் தெரிவித்தார்.

இச் செயலமர்வில், வடமராட்சி, துணுக்காய, மூதூர், மட்டக்களப்பு, கல்முனை ஆகிய கல்வி வலயங்களைச் சேர்ந்த ஆசிரிய நூலகர்கள் கலந்து கொண்டனர்.

இச் செயலமர்வில் கலந்து கொண்ட ஆசிரிய நூலகர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டது. இவ் வைபவம் வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்கள நூலக இணைப் பாளரும் உதவிக் கல்விப் பணிப்பாளருமான என்.அனந்தராஜ் தலைமையில் நடைபெற்றது.

அங்கு பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட மாகாணக் கல்விப்பணிப்பாளர் தொடர்ந்து பேசுகையில்.

பாடசாலை நூலகம் ஒன்றின் 90 வீதமான அபிவிருத்தி ஆசிரிய நூலகர்களின் கையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

எனவே, ஆசிரிய நூலகர்கள் கடமையை செவ்வனே நிறைவேற்றி வடக்கு-கிழக்கு மண்ணில் வாழும் மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்காக அயராது உழைக்க வேண்டும் என்றார். (க-5)

# கத்திகளுடன் கைதான இளைஞர்களுக்கு 16 ஆம் திகதி வரை விளக்க மறியல்!

(யாழ்ப்பாணம்)

ஆடடோ ஒன்றில் இரவு வேளை கிறிஸ் கத்திகளுடன் பயணித்துக் கொண்டிருந்த சமயம் கைது செய்யப்பட்ட 6 இளைஞர்களும் எதிர்வரும் 16 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கோண்டாவில் ஸ்ரேசனடியில் வைத்துக் கடந்த திங்கட் கிழமை இரவு 9.00 மணியளவில் கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட மேற்படி இளைஞர்கள் 6 பேரும், கோப்பாய் பொலிஸாரால் நேற்று முன்தினம் யாழ்.மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி இ.த. விக்னராஜா முன்னிலையில் ஆஜர்ப் படுத்தப்பட்டனர்.

இதனை விசாரித்த நீதிபதி, பிரஸ்தாப இளைஞர்கள் 6 பேரையும் எதிர்வரும் 16 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்.சிறைச்சாலை அதிகாரிக்கு உத்தர விட்டுள்ளார். (ற-19)

# க.பொ.த (சாதாரண தரம்) மாதிரிப் பரீட்சை - 2004

## விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்

ஆக்கம்: செ.அன்ரன்
(முன்னாள் ஆசிரிய ஆலோசகர்
தொலைக் கல்வி போதனாசிரியர்)

நேரம்: 3மணி

## பகுதி II

**முதலாம் வினா கட்டாயமாது. எல்லாமாக எட்டு வினாக்களுக்கு விடை தருக.**

(1) அன்றை சமூகம் பல இயற்கைப் பதார்த்தங்களைத் தமது அன்றாடத் தேவைகளுக்குப் பயன்படுத்தின. இன்று விஞ்ஞான தொழில்நுட்ப அபிவிருத்தியால் பொலித்தீன், பொலிபுறப்பலீன் போன்ற பல செயற்கைப் பிரதியீட்டுப் பொருட்கள் பாவிக்கப்படுகின்றன.

i. 2004 முதல் அரச அலுவலகங்களிலும் கூடப் பொலித்தீன் பாவனை சட்டவிரோதியாக்கப்பட்டது ஏன்? 2 காரணங்கள் தருக.
ii. பொலித்தீனின் ஒரு பகுதியம் யாது? அதன் கட்டமைப்பை எழுதுக?
iii. பொலித்தீனை ஒத்த வேறு செயற்கைப் பிரதியீட்டுப் பொருட்கள் 4இன் பெயர்களைத் தருக.
iv. பொலித்தீன் பாவனை அதிகரிப்புக்கான 2 காரணங்கள் தருக.
v. பொலித்தீன் பாவனையால் கடலில் அழிந்து வரும் விலங்கு எது? அது அழியக் காரணம் யாது?
vi. பொலித்தீன் பாவனை நன்மையா? தீமையா உமது காரணங்களைத் தருக.

(2) புவியில் காணப்படும் பயன்மிகு பொருட்களில் சுண்ணாம்புக் கல்லும் ஒன்றாகும். இது பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்தது ஆகும்.

i. சுண்ணாம்புக்கல் காணப்படும் இடம் ஒன்று எழுதுக.
ii. சீமெந்து உற்பத்திக்கு சிறந்த சுண்ணாம்புக்கல் எங்கே உண்டு?
iii. நீறிய சுண்ணாம்பின் இரசாயனப் பெயர் யாது? குறியீட்டை எழுதுக?
iv. நீறாத சுண்ணாம்பின் இரசாயனப் பெயர் யாது? குறியீட்டை எழுதுக?
v. உள்நாட்டு முறையில் சுண்ணாம்பு உற்பத்தி செய்யப்படும் படிமுறைகளை எழுதுக?
vi. அம்முறையில் உள்ள குறைபாடுகளை எழுதுக? குறைபாடு ஏற்படக் காரணம் யாது?
vii. நீறாத சுண்ணாம்பின் பயன்கள் 4 தருக.
viii. சுண்ணாம்புக் கல்லின் வெப்பப் பிரிகைக்கான சமன் செய்த சூத்திரச் சமன்பாட்டை எழுதுக?
ix. இரத்தினக் கல்லின் சிறப்பியல்புகள் 2 தருக? இரண்டின் பெயர் தருக? எடுக்கப்படும் 2 இடம் தருக?
x. இலங்கையில் இரத்தினக் கல் அகழ்தல் கைத்தொழிலை மேம்படுத்தத் தக்க கருத்துக்கள் 4 தருக.

(3) i. முளைவகை என்றால் என்ன?
ii. எம்முறையால் முளைவகைகளைப் பெறலாம்.
iii. நீர்கூறிய முறையின் 3 நன்மைகள் தருக.
iv. மேற்கூறிய முறை விலங்குகளில் மேற்கொண்ட போதிலும் ஏன் மனிதனில் மேற்கொள்ளுவது சாத்தியப்படவில்லை?
v. படத்தில் உள்ளது பதியமுறை இனப்பெருக்க அமைப்பு ஒன்றின் வெட்டுமுகமாகும். இந்த பதியமுறை இனப்பெருக்க அமைப்பின் விசேட பெயர் யாது?




vi. மேற்படி பதியமுறை இனப்பெருக்க அமைப்புக் கொண்ட தாவரம் ஒன்றினைப் பெயரிடுக?
vii. வல்லாரையின் பதியமுறை இனப்பெருக்க அமைப்பு ஓடி எனப்படும். ஓடி எதன் திரிபாகும்?
viii. அன்னாசி எதன்மூலம் இனப்பெருக்கப்படும்.

(4) ஓய்வில் இருந்து புறப்பட்ட மோட்டார் வண்டி ஒன்றின் இயக்கம் தொடர்பான நேரத்திற்கும் வேகத்திற்கும் இடையேயுள்ள தொடர்பு அட்டவணையில் உள்ளது.


| நேரம் (S) | 0 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வேகம் (m/s) | 0 | 5 | 10 | 15 | 15 | 15 | 15 | 10 | 5 | 0 |

i. மோட்டார் வண்டியின் இயக்கத்திற்கான வேகநேர வரைபை வரைவதற்கு
அ) அச்சுக்களை வரைக?
ஆ) வேகத்தை Y அச்சிலும் நேரத்தை X அச்சிலும் குறிக்க.
இ) வரைபை வரைக.
ii. வண்டி அடைந்த அதியுயர் வேகம் யாது?
iii. முதல் மூன்று செக்கன் நேரத்தில் ஆர்முடுகலைக் கணிக்க?
iv. மாறா வேகத்துடன் பயணம் செய்த தூரம் யாது?
v. மோட்டார் வண்டி பயணம் செய்த மொத்தத் தூரம் யாது?
vi. வண்டியின் திணிவு 50Kg வினா (iii) இல் வண்டி பெற்ற ஆர்முடுகலை அடையத் தேவையான விசை யாது?

(5)



i. மின்குமிழின் பெயர் யாது?
ii. மின்குமிழ் பழுதடைந்த பின் அதனைக் கழற்றிய குமார் பின்வரும் அமைப்புக்களை அவதானித்தான். இவை இலத்திரனியல் சாதனங்கள் என அறிந்தான். அமைப்பில் உள்ள S சாதனங்களின் பெயர்களைத் தருக.
iii. இம்மின்குமிழ் இன்று பிரபல்யமடைவதற்கு 2 காரணங்கள் தருக.
iv. A யின் பெயர் யாது?
v. வெப்பம் கூடினால் X அணையும் வெப்பம் குறைந்தால் X ஒளிரும்





அ) வெப்பம்கூடி அணைவதைப் படம் மூலம் காட்டுக.
ஆ) அணைவதற்கான சந்தர்ப்பம் ஏற்படும் காரணத்தை விளக்குக.
vi. அ) மின்மூலம் பிரித்தெடுக்கும் உலோகங்கள் 2 தருக.
ஆ) அவற்றின் பாவனை அண்மையில் ஏற்படக் காரணம் யாது?

(6) i. சமிபாடடைந்த உணவை உறிஞ்சுதலை வினைத்திறனுடன் செய்ய சிறுகுடல் கொண்டுள்ள இசைவாக்கங்கள் 2 தருக?
ii. அ) குருதியை ஆக்கும் இரு பிரதான கூறுகளும் எவை?
ஆ) மனித இதயத்தின் 4 அறைகளையும் பெயரிடுக? அதில் தடித்த சுவர் உள்ள அறை எது?
iii. அ) மனிதனின் 4 குருதி இனங்களையும் பெயரிடுக? அவற்றைக் கண்டறிந்தவர் யார்?
ஆ) இவற்றில் பொது வழங்கி எது, ஏன் பொதுவழங்கி என அழைக்கப்படுகிறது?
இ) கூடுதலானோர் கொண்டுள்ள குருதி இனம் எது?
ஈ) குறைவானோர் கொண்டுள்ள குருதி இனம் எது?
iv. அ) குருதிச் சோகையுடையவர் எக்கனியுப்புக் குறைபாடுடையவர்?
ஆ) சுகதேகி ஒருவரின் குருதி அமுக்க மருத்துவ அறிக்கையை எழுதுக?
v. குருதியின் தொழில்கள் 4 தருக? தொழில்களுக்கான இசைவாக்கங்கள் யாவை?
vi. ஒரு சீர்த்திட நிலை என்றால் என்ன? அது எதனால் மேற்கொள்ளப்படுகிறது?
vii. வெல்ல ஒரு சீர்த்திட நிலையை விளக்குக? இதன் குறைவால் ஏற்படும் நோய் யாது?
viii. E.S.R குருதிப்பரிசோதனையின் தமிழ் விரிவாக்கம் யாது? சுகதேகியில் இதன் பெறுமான அளவு யாது?

(6) விஞ்ஞான விளக்கம் தருக.
i. உணவு சமைக்கும் கரண்டிகளின் கைப்பிடி பெரும்பாலும் மரத்தால் செய்யப்படுகிறது?
ii. ஆழங்குறைந்த நீர் நிலைகளில் கடுஞ்சூரிய ஒளி உள்ள வேளைகளில் பச்சை அல்சாப்படைகள் (பாசி) நீரின் மேற்பரப்பில் மிதக்கும்.
iii. அறைவெப்ப நிலையில் இருக்கும் உலோக மேற்பரப்பு குளிர்வானதாகவும் மரமேற்பரப்பு குளிர் அற்றதாகவும் இருக்கும்.
iv. வீடுகள் அமைக்கும் இடங்களில் முட்டுக் கொடுக்கும் தடிகள் நேரடியாக நிலத்தில் நடப்படாமல் பலகைகளின் மீது நடப்படுகின்றன.
v விமானங்களின் புறச்சட்டம் அலுமினியக் கலப்புலோகத்தால் ஆக்கப்படும்.
vi. தேங்காய் எண்ணெய் இட்டுப் பயன்படுத்திய பித்தளை விளக்கில் சில நாட்களின் பின் நீலப்பதார்த்தம் ஒன்று சேர்ந்து காணப்பட்டது?
vii. இலையில் உள்ள மாப்பொருளைப் பரிசோதிக்க முன்பு அவ்விலை நீரில் இட்டு அவிக்கப்படும்.

(8)




i. படத்தில் காட்டிய அமைப்பின் பெயர் யாது?
ii. அதன் முடிவிடங்களை 1 முதல் 8 வரை ஒழுங்காக இலக்கமிட்டு வரைக?
iii. இதன் பயன்பாட்டிலுள்ள 2 நன்மைகளைத் தருக.
iv. அமைப்பின் குறியீட்டை வரைக.
v. ஓர் தடையியில் முறையே சிவப்பு, மஞ்சள், செம்மஞ்சள் நிறக் கோடுகள் மட்டும் இருப்பின் அதன் பெறுமானம் யாது?
vi. துவிமுனை ரான்சிஸ்ரரின் விரிவாக்கத்தைக் காட்டும் சுற்று வரிப்படம் மட்டும் வரைக.

(8 பக்கம் பார்க்கவும்)

# முதுமையின் சவால்களை எதிர்கொள்ளல்

(தொடர்ச்சி....)

உலக சுகாதார மையம் 65 வயதிற்கு மேற்பட்டவர்களை இளம் முதியோர் என்றும், 75 வயதிற்கு மேற்பட்டவர்களை மூத்தமுதியோர் என்றும் பிரித்து நோக்குகின்றது. இதில் இந்த இளம் முதியோர், சமுதாயத்திற்கு மிகவும் முக்கியமான செயல்களை ஆற்றக் கூடியவர்கள். அவர்களது உள செயற்திறன் தெளிவாக இருப்பதால் (3%மட்டுமே குறைந்திருப்பதாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றது) அவர்கள் அனுபவ மேன்மை பொருந்தியவர்கள். ஆனால் 80 வயதடையும் போது 30% உளசெயற்பாடு குறைந்துவிடும். மூளைக்கும், மனதுக்கும் பிரயோசனமான பயிற்சிகள் செய்து வருவதன்மூலம் இத்தாக்கத்தையும் குறைக்கலாம். இது தனி மனிதனாகவும், குடும்பத்தாராலும் செய்யக்கூடிய தகுந்த காரியம்.

காலம் மாற, சமுதாய விழுமியங்கள், நடையுடை பாவனை மாறுவது தடுக்கமுடியாதது. வயது கூடியவர்களுக்கும், குறைந்தவர்களுக்குமிடையே 25-35 வருட இடைவெளி இருக்கும் பொழுதே இம்மாற்றம் தெரியும். இதனைத் *தலைமுறை விரிவு* என்று கூறலாம். இரண்டு தலைமுறை விரிவு பேரன் பேர்த்தி - என்று வரும்பொழுது பிரச்சினையாகிவிடும். இம்மாறுதல்கள் ஏற்றுக்கொள்ளப்படவேண்டியது என்பதை முதியோர் உணரவேண்டும்.

முதியோருக்கு இடையேயும் கலந்து உறவாடி தங்கள் காலத்தை எண்ணி மகிழ, ஒன்றுகூடல் அவசியம். இதற்கு ஏதுவாக முதியோர் கழகங்கள் கிராம மட்டத்தில் அமைக்கப்படவேண்டும். முதியோர் என்று தம்மை அழைக்க விரும்பாதவர்கள் சிரேஷ்ட மக்கள் குழுக்கள், அமைப்புகள் என்று மேற்குலகில் அழைத்துக் கொள்ளுகின்றார்கள். இவற்றின் மூலம் தத்தம் வயதொத்தவர்களுடன் பேசிப் பழகுவது, சிரித்து மகிழ்வது, உடல் நிலைக்கு ஏற்ற உள்ளக, வெளிக்கள விளையாட்டு நிகழ்ச்சிகளை நடத்துவது, பங்குபற்றுவது முதலிய நடவடிக்கைகளில் ஈடுபடுவது ஒரு பெரிய மருந்தாக இருக்கும். இவ்வாறான கழகங்கள் சில இடங்களில் முன்னுதாரணமாக அமைக்கப்படுவதற்கு அரச சார்பற்ற நிறுவனங்கள் முன்வரவேண்டும். அதிகமான அரசியல் தலைவர்களும் இவ்வாறான வயதொத்தவர்களாக இருப்பதால் அரச உதவியும் பின்னர் கிடைக்கும்.

தாம்பத்திய வாழ்வின் அடிப்படையில் பாலுறவு இருப்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்று. முதுமையெய்தும் பொழுது, விதவைகள் தொகை அதிகமாக இருப்பதும், பாலுணர்வு பலருக்கு, முக்கியமாக ஆண்களுக்கு தொடர்ந்து இருப்பதும் அறியப்பட்ட ஒன்று. ஆயினும் பாலுணர்வுக்காக மட்டுமன்றி, துணை தேவைப்படும் இக்காலப்பகுதியில் விதவைகள், தபுதாரர்களுக்கிடையிலான திருமணங்களை பிள்ளைகளே முன்னின்று நடத்திவைப்பது காலத்திற்கேற்ற மாற்றமாய் இருக்கும். சமுதாயம் இதை ஏற்றுக்கொள்ளும் காலம் வெகு தூரத்தில் இல்லை.

சமுதாயத்தின் கணிசமான பகுதியினர் முதியோர் என்னும் காலம் வந்து கொண்டிருப்பதால், தலைமைத்துவங்களும் அவர்கள் கையில் இருப்பதால் இது நடந்தே தீரும். சட்டங்களும் மாறும். வயதானவர்களுக்கிடையே திருமணங்கள் செய்துவைப்பதன் மூலம் அவர்களுக்கு இருக்கும் பல பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதாக அமையும். வாழ்க்கை முடியவில்லை. இன்னும் வாழவேண்டும் என்ற முக்கியமான மன உணர்வையும் கொடுக்கும். பாலுறவு, மற்றும் உடல், உள பிரச்சினைகள் இருந்தால் மருத்துவ உதவி பெற்றுக்கொள்ளலாம். மேற்கு நாடுகளில் இப்பொழுது பெரிதும் பேசப்படும் வயாகரா மருந்து காலத்தின் கோலம். சமூகத்தின் ஒரு தேவையின் பிரதிபலிப்பு என்பதை நாமும் மறுக்கமுடியாது.

உணங்கி ஒருகால் முடமாகி  
ஒரு கண்ணின்றிச் செவியிழந்து  
வணங்கு நெடுவால் அறுப்புண்டு  
மன்னு முதுகில் வயிறொட்டி  
அணங்கு நலிய மூப்பெய்தி  
அகல் வாயோடு கழுத்தேந்திக்  
கணங்கள் முடுவல் பின்சென்றால்  
யாரைக் காமன் துயர் செய்யான்?



என்ற பாடல் மூலம் மன்மதவாதனை எவ்வளவு கொடிது என்று விவேக சிந்தாமணி ஆசிரியரால், பெட்டை நாய் - முடுவல், பின் செல்லும் ஆண் நாய் - சுணங்கன், அதுவும் பல குறைபாடுகள் நிறைந்த, மூப்பெய்திய ஆண் நாய் மூலமாகக் கூறப்படுகின்றது.

இவ்வாறான பல பிரச்சினைகள் வயதானவர்களுக்கு இருந்தாலும், இன்னும் இவை சமூகத்தால் உணரப்படவில்லை. அரசசார்பற்ற நிறுவனங்களும் - அவை சர்வதேச, தேசிய, பிரதேச என்ற எந்த அமைப்பாய் இருந்தாலும் - சிறுவர்களுக்கு, பெண்களுக்கு, கர்ப்பிணித் தாய்மாருக்கு, வறியவருக்கு என்று சமூகத்தில் பல்வேறு குழுமங்களுக்காகக் குரல் கொடுத்தாலும், அவர்களுக்காகச் சேவையாற்றினாலும், வயதானவர்களுக்கு என்று பெருமளவில் தேவைகளைப் பூர்த்தி செய்ய முன்வரவில்லை. ஐக்கிய நாடுகள் சபையில் 2001ஆம் ஆண்டளவில் தான் **United Nations Ageing Unit** என்று ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. **Help Age International, International Institute on Ageing (INIA)** என்பன சர்வதேச அங்கீகாரத்துடன் சிறிய அளவில் இயங்கும் இரண்டு அமைப்புகளாகும். இவை சமூக மட்டத்தில் மூப்பெய்தியவரிடையே வேலை செய்வதற்குரிய பயிற்சியைப் பரந்த அளவில் கொடுக்க முன்வந்துள்ளன. பிலிப்பைன்ஸ், ஜப்பான் முதலிய நாடுகள் இப்பொழுதே கணிசமான அளவில் இவற்றுடன் இணைந்து செயற்பட ஆரம்பித்துவிட்டன. இலங்கையிலும் **Helpage International** பண்டாரவளையிலும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது.

இந்நிலையில் இங்கு புதிதான ஒரு கருத்தை ஆராயவேண்டும். பெரிதான நிலப்பரப்பு இருக்கும் இடங்களில் புதிதாக முதியோர் கிராமங்களை அமைப்பது இக்கருத்து. சிறு வீடுகள், கொட்டகைகள் முதலியவை அமைப்பித்து, ஒவ்வொரு முதியவருக்கும் ஆண், பெண் வேறுபாடின்றி தனித்தோ, குடும்பமாகவோ இவ்வாறு பொருத்தமான இருப்பிட வசதியை வழங்குதல், பொழுதுபோக்குவதற்கு பொது இடங்களும், மருத்துவ வசதி, தனிப்பட்ட கவனிப்பு என்ற வகையிலும் ஒரு நிர்வாகத்தின் கீழ் இக்கிராமம் இருக்கவேண்டும்.

உணவுத் தேவைக்காக உணவு விடுதி போன்றனவுடனும், போக்குவரத்துச் சாதனங்கள் முதலியவற்றுடனும் இது இயங்கவேண்டும். இவற்றில் இருப்பவர்கள் குறிப்பிட்ட தொகையைத் தங்களது பென்சன் ஓய்வுதியம் அல்லது பிள்ளைகள் அனுப்பும் பணம் போன்றவற்றின் மூலம் கொடுத்து இடம் எடுக்கக்கூடியதாக இருக்கும். இவ்வாறான அமைப்பில் வசிப்பவர்களுக்கு ஓரளவு பிரத்தியேக வாழ்வும், கவனிப்பும், பொது ஈடுபாடும் இருப்பதாக அமையும். இவ்வாறான ஒரு அமைப்பு அரசசார்பற்ற பொது நிறுவனங்களின் உதவியோடு ஆரம்பிக்கப்படவேண்டும். ஒன்று சரியாக இயங்கினால் பின்னர் வேறு இடங்களுக்கு விஸ்தரிக்கப்படலாம்.

யாழ்ப்பாணத்தில் இன்று பல இடங்களில் வீடுகளில் வசிக்கும் மூத்தோர் நன்மை கருதி, பகல்நேர கவனிப்பு நிலையங்களை உருவாக்கி இருக்கிறார்கள். இவை முதியவர்கள் வந்து, ஆற அமரப் பேசி, மற்றவர்களைச் சந்திக்க, ஆறுதல்பெற வசதியாக இருக்கும். இவர்கள் இங்கு இருக்கும் பொழுதோ அல்லது வீட்டில் இருக்கும் பொழுதோ, பயிற்றப்பட்டவர்கள் உதவிக்கு வரலாம்.

முடிவாக எம்மவரைப் பொறுத்த மட்டில் மூப்படையும் பொழுது ஏற்படக்கூடிய பிரச்சினைகளுக்கு மிகவும் நல்ல ஏற்பாடு, கூட்டுக் குடும்பம்.

**வைத்திய கலாநிதி**  
**செ.சு.நச்சினார்க்கினியன்**

அது முடியாதவிடத்து, தம்மைத்தாமே கவனித்துக்கொள்ளக்கூடியவர்களுக்கு மூப்புடையவர்களுக்காக ஒரு கிராமம் போன்ற அமைப்பை ஏற்படுத்திக் கொடுப்பது சிறந்ததாக இருக்கும்.

இவற்றுக்கெல்லாம் அப்பாற்பட்ட முதியவர்கள், விசேடமான கவனிப்பைப் பெறுவதற்கு வயோதிபர் விடுதிகளுக்குச் செல்லவேண்டி இருக்கும். இவற்றில் சில வைத்தியசாலைகளாகவே இருந்துவிடவேண்டி வரலாம் - **Geriatric Hospitals.** எந்த அளவு நீண்டகாலத்திற்கு வயோதிபர் இவ்வாறான நிறுவன அமைப்புக்குள் வராமல், பிள்ளைகளும், உற்றார் உறவினர்களும் அவர்களை வைத்து, நல்ல முறையில் பாதுகாத்துப் பராமரித்து அவர்கள் மூலம் சமூகம் பயன்பெறுகிறதோ, அந்தச் சமூகம் ஒரு நாகரிகம் அடைந்த சமூகம் என்று கணித்துக் கொள்ளலாம்.


*நன்றி:முதுமை*

---

(..7.ஆம் பக்கத் தொடர்ச்சி)

vii. விரியலாக்கம் என்றால் என்ன?  
viii. விரியலாக்கம் தவிர ரான்சிஸ்ரரின் வேறோர் பயன்பாடு தருக.  
ix. வானொலியில் பயன்படும் பிரதான கொள்ளவி யாது?  
x. வானொலி ஊடுகடத்தலின் படிகளை மட்டும் பாய்ச்சல் கோட்டுப் படத்தில் காட்டுக.

(9) i. படத்தில் காட்டிய அமைப்பின் பெயர் யாது?  
ii. மேற்படி அமைப்பால் ஆற்றப்படும் செயலின் பெயர் யாது




iii. மேற்படி செயற்பாடு கடத்தப்படும் பாதையின் பெயர் யாது?  
iv. மேற்படி பாதை ஒழுங்கைத் தருக.  
v. படத்தில் A முதல் F வரை பகுதிகளை மட்டும் எழுதுக.  
vi. மேற்படி அமைப்பால் ஆளுகை செய்யப்படும் இரு செயற்பாடுகளைத் தருக.

(10)A. i. மகரந்தச் சேர்க்கை என்றால் என்ன?  
ii. அவற்றின் வகைகள் யாவை?  
iii. எவ்வகை மகரந்தச் சேர்க்கை உகந்தது? ஏன்?  
iv. மேற்படி உகந்த மகரந்தச் சேர்க்கையை மேற்கொள்ளுவதற்குத் தாவரங்கள் காட்டும் இசைவாக்கப் பொறிமுறைகள் 4 தருக.  
v. மகரந்தச் சேர்க்கையைத் தொடர்ந்து பூவில் இடம் பெறும் இரு செயற்பாடுகளைக் குறிப்பிடுக.  
vi. அ)கன்னிக்கனியமாதல் என்றால் என்ன?  
ஆ)இயற்கையில் இவ்வகைக்கனிகள் இரண்டைக் குறிப்பிடுக.

B. பறவைகளால் மகரந்தச் சேர்க்கையை மேற்கொள்ளும் பூக்கள் சிவப்பு அல்லது செம்மஞ்சள் நிறமானவை என்று ஒரு மாணவன் கூறினான். இதனை ஆய்வு செய்து பார்க்க இரண்டு மாணவர் முயன்றனர்.  
i.ஆய்வுக்குரிய கருதுகோள் யாது? ii. ஆய்வின் படிகளைத் தருக.  
iii. நீவிர் முடிவுக்குவர எடுக்கும் அம்சங்கள் யாவை?

# ஹிந்தி நட்சத்திரங்களின் கலைநிகழ்வுக்கு தேசிய பிக்குகள் சங்கம் எதிர்ப்பு

கொழும்பில் நடைபெறவுள்ள ஹிந்தி திரையுலக நட்சத்திரங்கள் பங்குபற்றும் நட்சத்திரக் களியாட்ட நிகழ்ச்சியைத் தடைசெய்யவேண்டும் என்று கோரி தேசிய பிக்குகள சங்கம் கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்திற்கு முன்பாக நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தியது.

ஹிந்தித் திரையுலகின் முன்னணி திரை நட்சத்திரங்களில் ஒருவரான ஷாருஹான் தலைமையில் ப்ரீத்தி ஸிந்தா, ஸபி அலிஹான், ப்ரியங்கா சோப்ரா, ஜாவிட் ஹான், ஷெரினா ஜெட்லி ஆகியோர் உட்பட நடனக் குழுவினர் பங்குபற்றும் இந்த மாபெரும் கலை நிகழ்ச்சி கொழும்பு குதிரைப் பந்தயத்திடலில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

இந் நிகழ்ச்சிக்கான ரிக்கெட் ஒன்றின் விலை 10 ஆயிரம் ரூபா வரை உள்ளது. நிகழ்ச்சியைக் கண்டுகளிக்கவென அண்டை நாடுகளான மாலைதீவு, சிங்கப்பூர் உட்பட மற்றும் பல நாடுகளிலிருந்தும் கூட ரசிகர்கள் ரிக்கெட்டுக்களை முற்பதிவு செய்துள்ளனர்.

இந் நிலையில் பிக்குகளின் இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டமும் விழா ஏற்பாடாளர்களை மிகுந்த நெருக்கடிக்குள் தள்ளியுள்ளது.

ஆர்ப்பாட்டக்காரர்கள் தமது எதிர்ப்பு குறித்து தெரிவிக்கையில - கலை நிகழ்ச்சி ஏற்பாடாகியுள்ள அன்றையதினம் மறைந்த வணக்கத்துக்குரிய கங்கொடவில சோம தேரரின் முதலாவது ஆண்டு நினைவு தினம். அன்றைய தினம் இப்படியான களியாட்ட நிகழ்ச்சியை அனுமதிக்க முடியாது.

தேரர் மறைந்த தினம் அன்று ஏற்பாடாகியுள்ள இந்நிகழ்வு ஒரு சதிமுயற்சியா என்று நாம் சந்தேகப்படுகிறோம். இவ் விழாவை இடம் பெறவிடாது தொடர்ந்தும் அமைதியான முறையில் நாம் எமது ஆர்ப்பாட்டப் பேரணியை நடத்துவோம் எனக் குறிப்பிட்டார். (ற-4)

# காலத்தால் அழியாது காப்பாற்றுவோம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தின் தொல்பொருட் சான்றுகளில் ஒன்றாகிய ஜமுனா ஏரி இன்று கவனிப்பாரற்றுப் பாழடைந்த நிலையிலேயே இருந்து வருகிறது.

14ஆம் நூற்றாண்டில மன்னன் பரராஜசேகரன் காலத்தில் பகர வடிவில் இந்த ஜமுனா ஏரி அமைக்கப்பட்டது.

ஜமுனா நதியில் இருந்து எடுத்துவரப்பட்ட புனித நீர் இதில் ஊற்றப்பட்டதனாலேயே ஜமுனா ஏரி என இது பெயர் பெற்றது.

நல்லூர் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பகுதியில் அமைந்துள்ள இவ்வேரி தறபோது கவனிப்பாரற்றுக் காணப்படுகின்றது. இதனால் அவ் ஏரியின் கட்டுகள் இடிந்து செல்வதோடு அருகில் பற்றைகளும் முளைத்துப் பாழடைந்த நிலையில் இது காட்சியளிக்கின்றது.

யாழ்ப்பாணத்தில் தமிழ் மன்னன் ஆட்சி செய்தமைக்குச் சான்றாக அமைந்துள்ள தொல்பொருட் சின்னத்தை அழிந்து போகவிடாமல் பராமரித்துப் பாதுகாக்க சம்பந்தப்பட்ட தரப்பினர் அனைவரும் நடவடிக்கை எடுக்கவேண்டியது அவசியம்.(ற-19)

# தனியார்துறை ஊழியர்களுக்கும் சம்பள அதிகரிப்பு வழங்கப்படும்?

(கொழும்பு)

வரவு-செலவுத்திட்டப் பிரேரணைக்கு இணங்க அரச ஊழியர்களுக்கு உயர்த்தப்பட்டிருக்கும் வேதன உயர்வு போன்று தனியார்துறை ஊழியர்களுக்கும் வேதன உயர்வுகள் வழங்குவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஆராயவுள்ளதாக தொழிலமைசசர் அதாவுட செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் ஊடகமொன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

எமது இந்தத் திட்டத்துக்கு அரசதுறையைச் சேர்ந்ததும், தனியார் துறையைச் சேர்ந்ததுமான தொழிற்சங்கங்கள் தமது பூரண ஆதரவிணை வழங்க முன்வந்துள்ளன.

அடுதத வருட ஆரம்பத்தில தனியார்துறை ஊழியர்களுக்கு வேதன உயர்வு வழங்குவதற்கு ஏற்ற வகையில் முயற்சிகள் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ற-4)

# தவணை விடுமுறை

(பொன்னாலை)

2004ஆம் ஆண்டின் இறுதித் தவணை விடுமுறைகளுக்காக அரசாங்கப் பாடசாலைகள் அனைத்தும் எதிர்வரும் 10ஆம் திகதிமுதல் மூடப்படவுள்ளன.

மீண்டும் 2005ஆம் ஆண்டின் முதலாம் தவணைக்காக ஜனவரி மாதம் 3ஆம் திகதி பாடசாலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ப-49)

# விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

கிராமிய மட்ட சுற்றாடல் குழுக்களுக்கான விழிப்புணர்வூட்டல நிகழ்ச்சி எதிர்வரும் 14ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ்.மாநகரசபையில் நடைபெறவுள்ளது.

இவ் விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சி மாவட்ட சூழல் அதிகாரிகளால் ஒழுங்கமைக்கப்பட்டு நடாத்தப்படவுள்ளது.

இந் நிகழ்ச்சியில் கிராமிய மட்டச் சுற்றாடல் குழுக்களைச் சேர்ந்தவர்கள் கலந்துகொள்ளவுள்ளனர். (ற-19)

# தென்னாபிரிக்க கிரிக்கெற் அணியில் மீண்டும் நிக்கி போயே சேர்ந்தார்

இங்கிலாந்து-தென்னாபிரிக்க அணிகளுக்கு இடையே நடைபெறும் டெஸ்ட போட்டியில் தென்னாபிரிக்க அணியில் நிக்கி



போயே மீண்டும் சேர்க்கப்பட்டுள்ளார்.

மைக்கேல் வோகன் தலைமையிலான இங்கிலாந்து கிரிக்கெற் அணி தற்போது தென்னாபிரிக்காவிற்கு சுற்றுப்பயணம் செயதுள்ளது. இரு அணிகளும் மோதும் முதல் டெஸ்ட் போட்டி வருகிற 17ஆம் திகதி ஜோகனஸ் போர்க்கில் நடைபெறவுள்ளது. டெஸ்ட் போட்டிககான தெனனாபிரிக்க அணியில் சூதாட்ட விசாரணைக்குப் பயந்து இந்திய சுற்றுப்பயணத்துக்கான அணியில் இருந்து விலகிய சுழல் பந்து வீச்சாளர் நிக்கி போயே மீண்டும் சேர்க்கப்பட்டிருக்கிறார். இந்திய பயணத்தை புறக்கணித்த முன்னணி ஆட்டக்காரா கிப்ஸ் மீண்டும் அணியில் சேர்க்கப்படவில்லை. கைவிரலில் ஏற்பட்ட காயம் காரணமாக அவதிபபட்டு வரும் கிப்ஸ் இன்னும் போட்டியில் விளையாடும உடல் தகுதியைப் பெறாததே அதற்கான காரணமாகும்.

இதுதவிர டேல் ஸ்டென், டிவில்லியர்ஸ் ஆகியோர் முதல் முறையாக அணியில் வாய்ப்புப் பெற்றிருக்கிறார்கள். சிம்பாப்வே அணிக்கு எதிரான 4 ஒருநாள் போட்டியிலும எளிதாக வெற்றிபெற்ற இங்கிலாந்து அணிக்கு தென்னாபிரிக்காவில் நிறைய சோதனைகள் காத்திருப்பது குறிப்பிடத்தக்கது. தெனனாபிரிக்க அணி வீரர்கள் விபரம் வருமாறு:-

கிரஹம் ஸ்மித் (தலைவர்), நிககி போயே, ஹாசிம் அம்லா, ஜோன்டர் டிபிரைன், டிவில்லியர்ஸ, டிப்பன்னர், அன்ரூஹோல், ஜாக்கலிஸ், மற்நயா நிற்றனி, ஷேன் போலக், ரூடொல்ப், டேல் ஸ்டென், சோலேகிளி. (து-7)

# விளையாட்டு செய்திகள்

# ஜோன் ரைட்டின் பதவிக்காலம் 2005ஆம் ஆண்டுவரை நீடிப்பு

இந்திய கிரிக்கெற் அணியின பயிற்றுவிப்பாளராக ஜோன் ரைட் தொடர்ந்தும் பணியாற்றுவாரென இந்திய கிரிக்கெற் சபை தெரிவித்துள்ளது.


அண்மைக் காலமாக இந்திய கிரிக்கெற் அணி நிறையத் தோல்விகளையே சந்தித்தது. குறிப்பாக அவுஸ்திரேலியாவிடம் சொந்த மண்ணில் தொடரை இழந்தது, பாகிஸ்தானுக்கு எதிராக நான்கு ஒருநாள் போட்டிகளில் தோல்வி அடைந்தது முதலியன அனைவரிடமும் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியிருந்தது. இத் தோல்விகளுக்கெல்லாம் அணியின் பயிற்றுவிப்பாளர் ஜோன ரைட்டே காரணமெனப் பலதரப்பினராலும் குறைகூறப்பட்டது.

இந்நிலையில் ஜோன் ரைட் அளித்த பேட்டி ஒன்றில் 'பயிறுவிப்பாளரை மாற்றினால் இந்திய அணியின் நிலையில் மாற்றம் ஏற்படலாம் என்றும், புதிய பயிற்றுவிப்பாளர்கள் சில புதிய விடயங்களைக் கற்றுக்கொடுக்கலாம்' என்றும் தெரிவித்திருந்தார்.

இப் பேட்டியை அடுத்து ஜோன்ரைட் பதவிக்கு வேறு ஒருவர் நியமிக்கப்படலாம் எனப் பலராலும் எதிர்பார்க்கப்பட்டது.

தற்போது 2004-2005 காலப் பகுதிக்கு ஜோன்ரைட்டே தொடர்ந்து பயிற்றுவிப்பாளராக பணியாற்றுவார் என இந்திய கிரிக்கெற்சபை தெரிவித்திருக்கிறது.


2000ஆம் ஆண்டு நவம்பரில் இருந்து இந்திய கிரிக்கெற



அணியின் பயிற்றுவிப்பாளராக கடமையாற்றிவரும் ஜோன்ரைட் காலத்தில் இந்திய அணி பல முக்கிய வெற்றிகளைப் பெற்றுள்ளமையும் மறுக்கமுடியாததாகும். கடந்த செப்ரம்பரில் நடைபெறற கிரிக்கெற் நிர்வாக சபைக் கூட்டத்தில் இவரின் பதவி நீடிப்புத் தொடர்பாக தீர்மானம எடுக்கப்பட்டது. அடுத்த வருடம் பாகிஸ்தான் அணியின் இந்தியச் சுற்றுப் பயணத் தொடர்வரை ஜோன்ரைட் பயிற்சியாளராக இருப்பார் என இந்திய கிரிக்கெற்சபை தெரிவித்திருக்கிறது. (து-7)

# பங்களாதேஷ் - இந்தியா டெஸ்ட் திட்டமிட்டபடி இன்று டாக்காவில்

இந்திய கிரிக்கெற் அணி திட்டமிட்டபடி பங்களாதேஷ் செல்வதற்கு இந்திய மத்திய அரசு அனுமதி அளித்ததைத் தொடர்ந்து இரண்டு டெஸ்ட் மூன்று ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் பங்குபற்



றுவதற்காக இந்திய அணி பங்களாதேஷ் சென்றுள்ளது.

முன்னதாக 'ஹர்கத் உல் ஜிகாதி' என்ற தீவிரவாத அமைப்பு அனுப்பிய மிரட்டல் கடிதம் காரணமாக இந்திய அணியின் பயணம் தாமதமானது. பினனர் பாதுகாப்புப் பொலிஸ குழுவினர் பங்களாதேஷ் சென்று நிலைமைகளை நேரில் ஆராய்ந்து இந்திய கிரிக்கெற் அணியின் பாதுகாப்பை உறுதிப்படுத்தியதையடுத்தே இந்திய அணி அங்கு செல்ல அனுமதிவழங்கப்பட்டிருக்கிறது.

இன்று ஆரம்பமாகும் முதலாவது டெஸ்ட் போட்டி டாக்காவில் நடைபெறுகிறது. இப் போட்டியில் விளையாடமட்டுமே தற்போது இந்திய அணிக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. டாககாவில் போட்டி நடைபெறும் மைதானம், வீரர்கள் தங்கும் ஹோட்டல் மற்றும் அண்மித்த பகுதிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வுசெய்த பாதுகாப்புக்குழுவினர், பாதுகாப்பை உறுதிசெய்ததன் பின்னரே இநதிய அணி அங்கு செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.


இதேவேளை, பிரச்சினைக்குரிய சிட்டஹோங் நகரில் இரண்டாவது டெஸ்ட் போட்டி 16-20ஆம் திகதி வரையும் முதலாவது ஒருநாள் போட்டி 23ஆம் திகதியும் நடைபெறத் திடடமிடப்பட்டுள்ள போதிலும் இந்திய அரசு அனுமதியளித்த பின்பே அப் போட்டிகளில் விளையாடுவது தொடர்பான இறுதி முடிவு எடுக்கப்படும் என இந்திய கிரிக்கெற் சபைத்



துணைத்தலைவர் ராஜிவ் சுகலா தெரிவித்திருக்கிறார். (து)

# இராணுவம் அரசியலில் தலையிட்டால் ஜனநாயகம் செத்துப் போய்விடும்

## முஷாரப் அரசைவிரட்ட முன்னாள் அதிபர் நவாஸ் அழைப்பு





(இஸ்லாமாபாத்)

**பாகிஸ்தான் அதிபர் முஷாரப்புடன் எந்தவித ஒப்பந்தத்தையும் ஏற்படுத்திக் கொள்ளமாட்டேன் என அந்நாட்டின் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப் தெரிவித்தார்.**

**கடந்த சில ஆண்டுகளுக்கு முன் பாகிஸ்தான் பிரதமராக இருந்தவர் நவாஸ ஷெரீப். அப்போது இராணுவத் தளபதியாக இருந்த முஷாரப் ஆட்சியைக் கைப்பற்றி நவாஷ் ஷெரீப்பை குடும்பத்துடன் நாடு கடத்தினார். தற்போது நவாஸ் ஷெரீப் சவூதி அரேபயாவில் தஞ்சம் புகுந்துள்ளார்.**

தற்போது அதிபராக உள்ள முஷாரப் இராணுத்தளபதி பதவியையும் தக்கவைத்துக்கொள்ள எதிர்க்கட்சிகளுடன் சமரசம் செயதுவருகிறார். குறிப்பாக பெனசிர் தலைமையிலான பாகிஸ்தான் மக்கள் கட்சி மற்றும் நவாஸ் ஷெரீப்பின பாகிஸ்தான முஸ்லிம் லீக் ஆகிய கட்சிகளுடன் ஒப்பந்தம் செய்துகொண்டுள்ளதாகக் கூறப்படுகிறது.


அதன்படி பாகிஸ்தானில் உள்ள சட்டசபைகளைக் கலைப்பது, புதிய தோதலை நடத்துவது, இராணுவததளபதி பதவியில் முஷாரப்பே நீடிப்பது என்று இரு தரப்பிலும் உடன்பாடு ஏற்பட்டதாகச் செய்திகள் வெளியாகின.

இந்தத் தகவல்களை நவாஸ் ஷெரீப மறுத்துள்ளார். பாகிஸ்தானில் உளள காக்சார் தெக்ரீக் கட்சித் தலைவர் ஹமீதுத் என்பவருடன அவா தொலைபேசியில் பேசியுள்ளார். அப்போது அவர் கூறியதாவது,

முஷாரப்புடன் எவ்வித ஒப்பந்தத்தையும் ஏற்படுத்திக் கொள்ளவில்லை. பாகிஸ்தானில் சர்வாதிகார ஆட்சியை நீக்க எனது கட்சி தொடர்ந்து பாடுபடும். முஷாரப்புடன் எனது கட்சி ஒப்பந்தம் செய்திருந்தால் நானும், எனது குடும்பத்தினரும் வெளிநாட்டில் தஞ்சம் புகுந்திருக்க வேண்டிய அவசியமே இருந்திருக்காது.

ஒருநாட்டின் நிர்வாகத்தில் இராணுவம் தலையிட்டால் ஜனநாயகம் அழிந்துபோய்விடும். பாகிஸ்தானில் வளர்ச்சியும், மறுமலர்ச்சியும் ஏற்பட இராணுவ ஆட்சிக்கு முடிவுகட்டவேண்டும். பாகிஸ்தான் நாட்டின் எல்லைகளைக் காப்பதே இராணுவத்தின் வேலை. அதைவிட்டு அரசியலில் தலையிடுவது அதன் பணி அல்ல. அவ்வாறு தலையிட்டால் ஜனநாயம் செத்துப போய்விடும்.

பாகிஸ்தானில் இராணுவ ஆட்சியாளர்களை விரட்ட மற்றக் கட்சிகளுடன எனது பாகிஸ்தான் முஸ்லிம் லீக் கட்சி இணைந்து செயலாற்றும. அரசுக்கு எதிராக ஒரு மாபெரும் இயக்கம் எந்தநேரதிலும் தொடங்கும். பாகிஸீதானில் ஜனநாயகம் தொடர்நதால், தொழில் மற்றும் வேளான் புரட்சி மூலம் வெளிநாட்டுகடன்களை விரைவில் அடைத்து விடமுடியும. இவ்வாறு நவாஸ் ஷெரீப் கூறினார். (ப)



**சபரிமலையில் நேற்றுமுன்தினம் மண்டலத் திருவிழா ஆரம்பமானது. தங்கக் கொடிமரத்தில் தந்திரி கண்டரரு மோகனரரு கொடியேற்றிய காட்சி.**

# 'அதிபர் தேர்தல் வேட்பாளரை விஷம் கொடுத்துக் கொல்ல சதி

## அதிர்ச்சித் தகவலால் உக்ரேனில் பரபரப்பு

(கீவ்)

முன்னாள் சோவியத் யூனியனில் இருந்து பிரிந்தசென்ற நாடுகளில் ஒன்று உக்ரேன். இங்கு கடந்த ஒக்டோபர் மாதம் 31ஆம் திகதி அதிபர் தேர்தல் நடந்தது. இதில் அதிபர் பதவிக்குப் பிரதமர் யானுகோவிச், எதிர்க்கட்சித் தலைவர் யுஷ்செஸகோ ஆகியோர் போட்டியிட்டனா.

இந்தத் தேர்தலில் பிரதமர் விக்டர் யானுகோவிச் வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டது. ஆனால் இதை ஏற்றுக் கொளள முடியாது. தேர்தலில் முறைகேடு நடந்ததாகவும் மறுதேர்தல் நடத்த வேண்டும் என்றும் யுஷ்செஸ்கோ புகார் கூறினார். இதையடுத்து உக்ரேன் முழுவதும் இருதரப்பினருக்குமிடையே கலவரம் நீடிக்கிறது.

சுப்ரீம் கோர்ட்டும் இந்தத் தேர்தல செல்லாது என்று அறிவித்துள்ளது. பாராளுமன்றமும் தேர்தல் வெற்றியும் செல்லாது என்று தீர்மானம் நிறைவேற்றி இருக்கிறது. ஆனால் மறு தேர்தல் நடத்தவும், அதிபர் பதவியை விட்டுக்கொடுக்கவும் யானுகோவிச் தயாராக இல்லை.

இதனால் குழப்பநிலை நீடிக்கிறது. இந்தப் பிரச்சினையில் ரஷியா வுக்கும் மேற்கத்திய நாடுகளுக்கும் இடையேயும் பிளவு ஏற்பட்டுள்ளது.

இந்தநிலையில் அதிபர் பதவிக்குப் போட்டியிட்ட யுஷ் செஸ்கோவை விஷம் கொடுத்துக் கொலை செய்ய முயற்சி நடந்துளளது.

கடந்த செப்ரெம்பர் மாதம் யுஷ்செஸ்கோ தேர்தல் பிரசாரம் செய்தபோது அவருக்கு உடல் நலக்குறைவு ஏற்பட்டது. அவர் ஆஸ்திரிய நாட்டு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றார். பிறகு வீடு திரும்பினார்.

அவருக்கு சிகிச்சையளித்த டாக்டர்கள் இப்போது விஷம் கொடுத்து அவரைக் கொல்ல முயற்சி நடந்திருப்பதாகத தெரிவித்துள்ளனர். பிரசாரத்தின் போது உணவிலோ, தண்ணீரிலோ விஷம் கொடுதிருக்கிறார்கள். அல்லது அவர்கள் ஊசி மூலம் விஷம் செலுத்தி இருக்க வேண்டும்.

இதனால்தான் அவருக்கு உடல் நலக்குறைவு ஏற்பட்டது. டையாக்சின் போன்ற விஷததைச் செலுத்தி இருக்கலாம என்று டாக்டர்கள் இப்போது தெரி வித்துள்ளனர்.

இந்தத் தகவல் உக்ரேனில் மீண்டும் பரபரப்பையும், பதட்டத்தையும் ஏற்படுத்தி இருக்கிறது. (ப)

### சுரங்கத் தொழில் அதிகரிப்பின் விளைவாக

# சீனாவில் திடீரென ஏற்பட்ட நிலச்சரிவில் 32பேர் பலி; 12பேரைக் காணவில்லை

(பீஜிங்)

சீனாவில் நிலக்கரிச் சுரங்கஙகள் அமைந்த மலைப்பகுதியில் நிலச்சரிவு ஏற்பட்டதில் 25 வீடுகள் புதையுண்டு 32 பேர் பலியாயினர்.

சீனாவின் தென்மேற்குப் பகுதியில் உள்ள குய்சோ மாகாணத்தில் ஒரு கிராமத்தில் நேற்றுமுன்தினம் திடீரென நிலசசரிவு ஏற்பட்டது. மலைச்சரிவிலிருந்த 25 வீடுகள் மீது மிகப்பெரிய பாறைகள் சரிந்து விழுந்ததில் அந்த வீடுகள் தரைமட்டமாயின.

இரவு நேரத்தில் இந்த நிலச்சரிவு ஏற்பட்டதால் பெரும்பாலானவர்கள் தூக்கத்திலேயே பலியாயினா். 32பேர் இச்சம்பவத்தில் பலியானதாக சீன ரீ.வி. தெரிவித்துள்ளது. மேலும் 12பேரைக் காணவில்லை.

மலையைச் சுற்றி நிறையச் சுரங்கங்கள் தோண்டப்பட்டதால்தான் இந்த நிலச்சரிவு ஏற்பட்டதாக கிராமத்தினர் தொிவித்துள்ளனர். இந்த நிலச்சரிவு சம்பவத்தைத் தொடந்து இங்குள்ள நிலக்கரி சுரங்கப்பணிகள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

சம்பவ இடத்தில் ஏராளமான மீட்புப்பணியாளர்கள் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து சீனாவில் அடிக்கடி சுரங்க விபத்துக்களும் சுரங்கம் தோண்டுவதால் உருவாகும் இயற்கை அனர்த்தங்களும் அதிகரித்து வருவதால் அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கான திட்டங்கள் பற்றி அந்நாட்டு அரசு ஆலோசித்து வருகிறது.

அத்துடன் இவ்வாறான விபத்துக்களால் பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணங்கள் வழங்குவது பற்றியும் அந்நாட்டு அரசு ஆராய்ந்து வருகிறது. (ப)

# திருமணம் செய்யவும் வரி!

கேரளாவில் ஆடம்பரத் திருமணங்களுக்கு வரி விதிக்கப்படும் என்று கேரள மாநில நிதியமைச்சர் வக்கம் புருஷோத்தமன் கூறியுள்ளார்.

திருமணங்களை ஆடம்பரமாக நடத்துவதும், ப்ளேடு கம்பெனிகளில் வட்டிக்குப் பணம் எடுப்பதும் பல குடும்பங்களையும் கடனில் சிக்கவைக்கிறது.

கையில் பணம் இல்லாதவர்கள் கூட விவசாயத்திற்கு என்று லோன் வாங்கி ஆடம்பரத் திருமணங்கள் நடத்துகின்றனர். விவசாயிகள் தற்கொலை செய்த பல சம்பவத்திற்குப் பின்னாலும் இதுதான் நடந்திருக்கிறது.

இதனால் தற்கொலை செய்பவர்களின் எண்ணிக்கை கேரளாவில் நாளுக்கு நாள் அதிகாித்து வருகிறது. எனவே கேரளாவில் ஆடம்பரத் திருமணங்களுக்கு வரி விதிக்கப்படும். அதுபோல அதிக வட்டிக்குப் பணம் கடன் கொடுக்கும் பளேடு கம்பெனிகளைக் கட்டுப்படுத்த பளேடு கம்பெனிகள் நடத்த லைசென்ஸ் கட்டாயமாககப்படுவது குறித்தும் ஆலோசித்து வருகிறோம்.

அதிகரித்துவரும் தற்கொலையைக கட்டுப்படுத்த இது உதவியாக இருக்கும. இனி இந்த விஷயங்கள் குறித்த விவாதங்கள் நடத்தப்படவேண்டும் ஆடமபரத் திருமணங்களுக்கு வரி வேண்டாம் என்பது அதிகமான பொதுமக்களின் கருத்தாக இருந்தால் இந்தத் திட்டம் கைவிடப்படும் என வைக்கம் புருஷொத்தமன் மேலும் கூறினார். (ப)

## WORLD NEWS உலக தரிசனம்



**பிலிப்பைனஸ் நாட்டின் வடபகுதியில் பெய்த கனமழையால் அங்கு வெள்ளப் பெருக்கும், நிலச்சரிவும் ஏற்பட்டுள்ளது. இதனால் பலர் வீடுகளை இழந்தனர். உயிரிழப்புக்கள் குறித்து தகவல்கள் ஏதும் இல்லை. மீட்புப் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகிறது. கிராமம் ஒன்றில் நிலச்சரிவினால் சரிந்து கிடக்கும் வீடு ஒன்று.**

# ஆப்கானின் புதிய அதிபராக கர்சாய் பதவியேற்றார்



ஆப்கானிஸ்தானில் ஜனநாயக முறைப்படி நடைபெற்ற தேர்தலில் அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஹமீத் கர்சாய், முறைப்படி பதவியேற்றுக்கொண்டார்.

ஆப்கானிஸ்தானில் சமீபத்தில் நடைபெற்ற அதிபா தேர்தலில் ஹமீத் கர்சாய் வெற்றிபெற்றார். காபூல்நகரில் இருக்கும் மன்னர் அரண்மனையில் அதிபரின் பதியேற்பு விழா நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

போரினால் பாதிக்கப்பட்ட இந்தப் பெரிய அரங்கம் சீரமைக்கப்பட்டு அங்கு பதவியேற்பு விழா கோலாகலமாக நடைபெற்றது. புதிய அதிபராக பதவியேற்க வந்த கர்சாய், பாரமபரிய உடையணிந்து வந்தார். தமது வலது கையில் இஸ்லாமிய புனித நூலான குர்ரானை வைத்திருந்தார். அவருக்கு அந்நாட்டு தலைமை நீதிபதியான பசல் ஹதிஷின்வாரி பதவிப்பரமாணம் செய்துவைத்தார்.

இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன் கண்விடல் - குறள்

வலம்புரி

# மகேஸ்வரன் எம்.பியின் துணிச்சல்மிகு வாக்களிப்பு

பாதுகாப்பிற்கான நிதி ஒதுக்கீடு எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவுடன், நிறைவேறியுள்ளது. சமாதானச் சூழ்நிலையில் பாதுகாப்பு நிதி இத்துணை தொகை தேவைதானா? என்ற விமர்சனங்களின் மத்தியில் அதற்கு ஐக்கிய தேசியக் கட்சியும் ஆதரவளித்துள்ளது.

இதிலிருந்து ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியிலிருந்தாலும் பாதுகாப்பிற்கு ஒதுக்கின்ற நிதியில் மாற்றமில்லை என்பது தெளிவாகின்றது.

எனவே சிங்கள அரசு தான் நினைத்ததைப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்கு சிங்களத்தின் பெயரால் எதிர்க்கட்சிகளும் ஆதரவு வழங்கத் தயாராக இருக்கின்றன என்ற உண்மை மீளவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அவ்வகையில் இதுபற்றி அதிகம் அலட்டிக்கொள்ளத் தேவையில்லை. ஆயினும் ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினராக இருக்கின்ற தி.மகேஸ்வரன் பாதுகாப்பிற்கான நிதி ஒதுக்கீட்டை எதிர்த்து வாக்களித்தமை பாராளுமன்ற வரலாற்றில் ஓர் புதிய விடயமாகும்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி போன்ற பேரினவாதக் கட்சிகளில் அவ்வப்போது தமிழர்களும் அங்கம்பெற்று பாராளுமன்ற உறுப்பினர்களாக - அமைச்சர்களாக இருந்துள்ளனர். இது இலங்கை அரசியல் வரலாற்றில் தவிர்க்க முடியாததாகிவிட்டது. இருந்தும் அவ்வாறு பேரினவாதக்கட்சிகளின் அங்கம்பெற்றிருந்த தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் தமிழர்களுக்கு எதிராக எடுக்கப்பட்ட தீர்மானங்களின் போதெல்லாம் வாய்மூடி மௌனிகளாக இருந்தது மட்டுமல்லாமல் விரும்பியோ விரும்பாமலோ அந்தத் தீர்மானங்களை ஆதரித்தனர்.

இதனால் தமிழர்களின் அழிவுக்கு தமிழர்களே காரணமாக இருந்த கதைகளும் உண்டு. ஆனால் பாராளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன் தனது கட்சியின் முடிவை மீறி பாதுகாப்பு நிதி ஒதுக்கீட்டுக்கு எதிராக வாக்களித்திருப்பது வரவேற்கத்தக்கதோர் விடயமாகும்.

கட்சி எடுத்த முடிவுக்கு மாறாக வாக்களித்தால் தனது பதவி பறிபோய்விடுமோ என்று பயங்கொள்கின்ற அரசியல்வாதிகள் மத்தியில் "பதவி" பற்றி எதுவுமே கவலைப்படாமல் பாதுகாப்பு நிதி ஒதுக்கீட்டுக்கு எதிராக வாக்களித்த மகேஸ்வரனின் செயல் பேரினவாதிகளுக்கு நிச்சயம் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கும்.

பாராளுமன்ற உறுப்பினர் என்பவர் தனது கட்சியின் கொள்கைகளோடு, ஒட்டி ஒடுங்கி செயற்பட வேண்டும் என நினைப்பதனாலேயே ஓர் நியாயபூர்வமான தீர்மானங்களை பாராளுமன்றத்தில் எடுக்கமுடியாது போகின்றது.

ஒவ்வோர் பாராளுமன்ற உறுப்பினர்களும் தேச நலனை, இன ஒற்றுமையை, பல்லின மக்களின் சுதந்திரத்தைக் கருத்திற்கொண்டு மனச்சாட்சிப்படி நடந்திருப்பார்களாயின், நடப்பார்களாயின் நாட்டின் அவசரகாலச் சட்டங்களோ அன்றி இனவாத சட்டங்களே பாராளுமன்றத்தில் நிறைவேறியிருக்கமாட்டாது.

ஆனால் பேரினவாத பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவருமே நாட்டு மக்களின் நலனை ஒதுக்கிவைத்துவிட்டு, கட்சி நலனையும், சிங்கள பௌத்த இனம் பற்றியுமே சிந்தித்தனர். இதனாலேயே இனப்பிரச்சினை விஸ்வரூபம் எடுக்கும் நிலையைத் தோற்றுவித்தது.

ஆனால், பாராளுமன்ற உறுப்பினர்கள் உண்மைக்காக தமது ஆதரவைத் தனித்தேனும் வழங்கவேண்டும் என்பதே பாதுகாப்பு நிதி ஒதுக்கீட்டுக்கு எதிராக வாக்களித்ததன் மூலம் மகேஸ்வரன் வலியுறுத்தியுள்ளார்.

இதன்மூலம் அவரின் செயற்பாடு பாராளுமன்றத்தின் பழமைவாதக் கலாசாரத்தை ஓரங்கட்டி உள்ளது எனலாம்.

அத்துடன், அவர் பாராளுமன்றத்தில் நடந்துகொள்ளும் முறையானது சிங்களப் பாராளுமன்ற உறுப்பினர்கள் முன்னர் நடந்துகொண்ட மிடுக்குக்கு சவாலாகவும் அமைந்துள்ளது எனில் அது மிகையன்று.

# அரசாங்கம் மீண்டும் போரை ஆரம்பித்தால் கடவுளால் கூட நாட்டைக் காப்பாற்ற முடியாது

## சபையில் சுரேஷ் எம்.பி.எச்சரிக்கை

(கொழும்பு)

ஆளும் கூட்டமைப்புஅரசாங்கம் போருக்குத் தயாராகி வருகின்றது. நவீனரக ஆயுதங்களும், விமானங்களும், இராணுவ தளபாடங்களும் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. அரசு மீண்டுமொரு யுத்தத்தை ஆரம்பிக்குமானால் இந்த நாட்டை கடவுளாலும் காப்பாற்ற முடியாது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ்பிரேமச்சந்திரன் நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் எச்சரிக்கை விடுத்தார்.

அரசாங்கத்தின்வரவுசெலவுத்திட்டம் யுத்தத்திற்கான திட்டமாகும். பாதுகாப்புக்காக 7 ஆயிரத்து 500 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ள நிலையில் இந்த பாதுகாப்பு அமைச்சு எதற்காக? என்றும் சுரேஷ் பிரேமச்சந்திரன் கேள்வி எழுப்பினார்.

பாதுகாப்பு அமைச்சிற்கான நிதி ஒதுக்கீட்டு குழுநிலை விவாதத்தில் உரையாற்றியபோதே சுரேஷ் பிரேமச்சந்திரன் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஒன்றுபட்ட இலங்கைக்குள் சமஷ்டித் தீர்வு ஒன்றை ஏற்படுத்துங்கள் என்றுதான் நாம் கேட்கின்றோம். அதற்குக் கூட நீங்கள் இடம் கொடுக்கவில்லை. இப்போது யுத்தத்திற்குத் தயாராகுகின்றீர்கள்.

ஒன்றை மட்டும் தெரிந்துகொள்ளுங்கள். யுத்தம் ஒன்று ஆரம்பித்தால் இந்த நாட்டைக் கடவுளாலும் காப்பாற்ற முடியாது. அச்சம் ஏற்பட்டிருக்கும் இந்த சூழ்நிலையில் பெருந் தொகையான நிதியை பாதுகாப்பு அமைச்சிற்கு ஒதுக்கியுள்ளதன் நோக்கம் என்ன?

### பாதுகாப்பு அமைச்சுக்கு அதிக நிதி ஒதுக்கீடு

எந்த மக்களைப் பாதுகாப்பதற்காக இந்தப் பாதுகாப்பு அமைச்சு? வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்கு அந்நிய படையெடுப்பு அச்சுறுத்தல் உள்ளதா? உளளூரில் இருக்கக்கூடிய தேசிய இனம் ஒன்றை அழித்து ஒழிப்பதற்காகவே இந்தப் பாதுகாப்பு அமைச்சு உள்ளது.

தமிழ் மக்களின் வாழ்க்கை மேம்பாட்டுக்காகவும் நிரந்தர அமைதிக்கு முன்னோடியாகவுமே யுத்த நிறுத்தம் செய்யப் பட்டது. பேச்சுக்கான ஒரு சூழலை உருவாக்கி அதனூடான நம்பிக்கையைக் கட்டி எழுப்பி தீர்வை ஏற்படுத்துவதற்கே அது உருவாக்கப்பட்டது. நாட்டைப் பிரிப்பதற்காக உருவாக்கப்படவில்லை.

### மக்களின் அவல வாழ்க்கை

கடந்த மூன்று வருடங்களாக என்ன நடக்கின்றது? இடம் பெயர்ந்த மக்கள் இன்னமும் தத்தமது சொந்த இடங்களில் மீளக்குடியேறவில்லை. அகதி முகாம்களிலேயேஇவர்கள் அவல வாழ்க்கை வாழ் ந்து வருகின்றனர்.



ஏறத்தாழ மூன்று இலட்சம் மக்கள் இன்னமும் அகதி முகாம்களிலேயே இருக்கின்றார்கள்.

தமிழ் மக்களின் இயல்பு வாழ்க்கை கூட வழமைக்குத் திரும்ப வில்லை.

சாவகச்சேரியின் உள்ளக கிராமங்கள், வடமராட்சி, நாகர்கோவில், யாழ்ப்பாணத்தின் கடற்கரை பகுதிகள் அதனை அண்டி உள்ள கிராமங்கள் போன்றவற்றிற்கு மக்கள் போகவும் முடியாது, குடியமரவும் முடியாதுள்ளது.

தென்பகுதியில் உள்ள சிங்கள இராணுவம் எமது பகுதிகளில் குடியேறி அமரவும், தங்களைத் தாங்களே பாதுகாத்துக்கொள்வதற்காகவும் எமது மக்களை எமதுபிரதேசத்திலிருந்து வெளியேற்றுகின்றனர். தமிழ்ப் பகுதிகளிலுள்ள பெருமளவான நிலப்பரப்பில் இராணுவம் தமது முகாம்களை அமைந்திருக்கின்றது.

### ஆயுதங்கள்கொள்வனவு

யுத்தநிறுத்த உடன்படிக்கையின் பின்னர்தான் இராணுவக் காவலரண்கள் பல புதிதாக அமைக்கப்பட்டிருக்கின்றன. யுத்த விமானங்களும், நவீன ஆயுதங்களும் கொள்வனவுசெய்யப்பட்டிருக்கின்றன. ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக்காலத்தில் தமிழ்மக்களும் புலிகளும் சலுகைகளை அனுபவித்து விட்டார்கள் என ஜே.வி.பி. கூறுகின்றது. ஆனால் அந்த காலத்திலும் ஆயுதங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருக்கின்றன.

### ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்

எங்களைப் பொறுத்த வரை ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரகட்சியும்,ஜே.வி.பியும் ஒரே குட்டையில் ஊறியமட்டைகள் தான்.அன்று அர்த்தமில்லாமல் புரட்சி செய்து ஆயிரக்கணக்கான இளைஞர்களைக் கொன்று குவித்த ஜே.வி.பி. இந்த பாராளுமன்றத்தில் கிரனைட் குண்டை எறிந்து லலித் அத்துலத் முதலியை காயப் படுத்திய ஜே.வி.பி., தற்போது இந்தச் சபைக்கு வந்து ஜன நாயகம் பேசுகின்றது.

யுத்த நிறுத்த மீறல், நாட்டின் பாதுகாப்பு என்றெல்லாம் பேசுவதற்கு ஜே.வி.பி.க்கு என்ன அருகதையிருக்கின்றது? என மேலும்அவர் கேள்விக்கணை தொடுத்தார்.

(ற-

# தினேஷ் தர்மேந்திரா விடுவிக்கப்படவில்லையா?

(கொழும்பு)

தினேஷ் தர்மேந்திரா இராஜரட்ணத்தின் விடுதலை தொடர்பாக முரண்பாடான தகவல்கள் தற்போது வெளியாகியுள்ளன.

தினேஷ் தர்மேந்திரா தீவிரவாதிகளால் விடுவிக்கப்பட்டதாக சகல ஊடகங்களும் நேற்று செய்தி வெளியிட்டிருந்தது.

குவைத்தில் இருந்து கொழும்புக்கு கிடைத்த செய்திகளில் ஈராக்கிய தீவிரவாதிகளால் தடுத்துவைக்கப்பட்டிருந்த பணயக்கைதிகளில் ஒரு சிலர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர் என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

ஆனால் அவ்வாறு விடுதலை செய்யப்பட்டவர்களில் தினேஷ் தர்மேந்திரா ராஜரட்ணமும் உள்ளாரா? என்பதனை உறுதிப்படுத்தமுடியாதுள்ளதாக இலங்கைத் தூதுவராலய அதிகாரிகள் கூறுகின்றனர். (க)

# தெற்காசிய நாடுகளுக்கிடையிலான புரிந்துணர்வை மேம்படுத்துவதன் மூலம் சமாதானத்தை ஏற்படுத்த முடியுமாம்

## ஜனாதிபதி நம்பிக்கை

தெற்காசியநாடுகளுக்கிடையேயான புரிந்துணர்வை மேம்படுத்துவதன் மூலமே சமாதானம் மற்றும் பொருளாதார முன்னேற்றம், நீதி ஆகியனவற்றை தெற்காசிய நாடுகளில் ஸ்தாபிக்கமுடியும் என்று ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

நேற்று அனுஷ்டிக்கப்பட்ட சார்க் தினத்தை முன்னிட்டு ஜனாதிபதியினால் வெளியிடப்பட்ட அறிக்கையிலேயே அவர் இதனைதெரிவித்துள்ளார். தெற்காசியாவில் கட்டுப்பாடற்ற வர்த்தகத்துறையை ஸ்தாபிப்பதில் கணிசமான முன்னேற்றம் கண்டுள்ளதை இலங்கையை வரவேற்பதாக தெரிவித்துள்ள ஜனாதிபதி 12 ஆவது சார்க் மகாநாட்டில் எடுக்கப்பட்ட பல தீர்மானங் களின் அடிப்படையில் செயல்படுவது குறித்தும் தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்.

(க-9)

# 'திண்மக்கழிவு முகாமைத்துவம்' குறித்த பயிற்சிப் பட்டறை

கிராமியமட்ட சுற்றாடல் குழுக்களுக்கான 'திண்மக் கழிவுமுகாமைத்துவம்' தொடர்பான பயிற்சிப்பட்டறை ஒன்று எதிர்வரும் 14ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.00மணிக்கு யாழ். பொதுநூலகக் கேட்போர் கூடத்தில் நடை பெற்றுள்ளது.

இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக யாழ். மாநகரசபை ஆணையாளர்கலாநிதி க.குணராசா கலந்துகொள்ளவுள்ளார்.இவர் அன்றையதினம்திண்மக் கழிவுகளை அகற்றுவதில் மக்களின் பங்களிப்பும் மாநகரசபை எதிர்நோக்கும் பிரச்சினைகளும் என்ற தலைப்பில் கருத்துத் தெரிவிக்கவுள்ளார்,

மேலும்இப்பயிற்சிபட்டறையில்யாழ். மாநகரசபைக் குட்ட கிராமசேவையாளர்கள் மற்றும் கிராமிய சுற்றாடல் குழுத்தலைவர்கள் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளார் மேலும் இப்பயிற்சிப்பட்டறையில் சுற்றாடல் பாதுகாப்பில் கிராம சேவையாளர்களின் பங்களிப்பு சுற்றாடல் பிரச்சினைகளை குழுவாக இனங்காணல்போன்ற விடயங்கள் பற்றியும் கலந்துரையாடப்படவுள்ளது.

(ற-19)

## சாயி அருள் முதம்



உண்மையான பாதையையும் தவறான பாதையையும் சரியான அடியையும் பிழையான அடியையும் பிரித்தறியக் கூடிய பகுத்தறிவை மனிதனுக்கு நல்குவது புத்தி மட்டுமே. காலாதி காலமாக காயத்தி மந்திரத்தின் மூலம் எனக்கு ஒளியீந்து நான் நேராக நடகக கூடியதாக எனது புத்தியைத்துண்டுவாயாக என மனிதன் பிரார்த்தனை செய்துவரும் காரணம் அதுவேயாகும்.

நன்றி
நாளாந்த நற்சிந்தனை

# மக்கள் பிரதிநிதி என்ற வகையில் சபை நடவடிக்கைக்கு அனுமதி வேண்டும்

## சிறையிலிருந்தபடி எஸ்.பி. சபாநாயகருக்குக் கடிதம்

(கொழும்பு)

நீதிமன்றத்தை அவமதித்தார் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் சிறையிலடைக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் எஸ்.பி. திஸநாயக்கா தான் நுவரேலியா மாவட்டத்தின் மக்களினால் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் பாராளுமன்றத்தில் தனது கடமைகளை மேற்கொள்வதற்கு அனுமதிக்க வேண்டுமென சபாநாயகருக்கு அவசர கடிதமொன்றை எழுதியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் அரசியல் அமைப்புச் சட்டத்தின் பிரகாரம் இந்த ஏற்பாட்டை செய்து கொடுக்க வேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை எஸ்.பி.திஸநாயக்கா மீதான நீதிமன்றத் தீர்ப்பு தொடர்பாக சர்வதேச மட்டத்தில் தாம் நகர்வுகளை மேற்கொள்ளவுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்த நாயக்கா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் பாராளுமன்றத்திலும் தாம் தமது எதிர்ப்பைக் காட்டிவருவதாகவும், இதற்கெதிராக சபையில் தொடர் நடவடிக்கைகளை எடுக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (த-08)

# சுவிஸ் மினரல் வோட்டர் தயாரிப்புக்கு அனுமதி ரத்து

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் செயற்பட்டுவரும் 'சுவிஸ் மினரல் வோட்டர்' எனப்படும் நீரைச் சுத்திகரித்து போத்தல்களில் அடைத்து விற்பனை செய்யும் நிறுவனத்தின் செயற்பாடுகளுக்கு யாழ். மாநகரசபை தடை விதித்துள்ளது.

மேற்படி சுத்திகரிப்பு நிறுவனம் புவிச்சரிதவியல் திணைக்களத்தின் ஊடாக உரியமுறையில் அனுமதிபெறவில்லை. மேலும் யாழ்ப்பாணத்திலுள்ள பிரதான வளங்களில் நீர் முக்கியமானது. அதனைச் சுத்திகரித்து போத்தல்களில் அடைத்து விற்பனை செய்வதற்கும், ஏற்றுமதிசெய்வதற்கும் யாழ்ப்பாணத்தில் போதுமான அளவு நீர் இல்லை. இவ்வாறான காரணங்களினால் இதற்கான அனுமதி ரத்து செய்யப்பட்டுள்ளதாக யாழ். மாநகர ஆணையாளர் கலாநிதி க.குணராசா தெரிவித்தார்.

நன்னீர்க் கிணறுகளிலிருந்து பெறப்படும் நீர் போத்தல்களில் அடைத்து ஏற்றுமதி செய்தால் யாழ்ப்பாணத்தில் நன்னீர் வளம் குன்றிவிடும் என்றும் அவர் தெரிவித்தார்.

கடந்த 24 ஆம் திகதி மேற்படி நிறுவனம் தனது பணியை ஆரம்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-19)

# ஊழியர் வேலை நிறுத்தத்தால் குப்பைகள் நிரம்பி வழிகின்றன

யாழ். மாநகரசபை சுகாதார ஊழியர்களின் வேலை நிறுத்தத்தால் யாழ்.நகரப் பகுதியில் குப்பை கூழங்கள் நிறைந்து காணப்படுவதுடன், துர்நாற்றமும் வீசும் நிலையும் ஏற்பட்டுள்ளது.

பெருமளவான குப்பைகள் வீதிகளில் கொட்டப்பட்டுள்ளதால் அவை வீதிகளின் இருமருங்கிலும் குவித்துள்ளன.

இதேவேளை யாழ்.மாநகர சபையின் மலசலகூட 'பிற்' சேதமாக்கப்பட்டுள்ளதாகவும் இதனால் அப்பகுதி எங்கும் துர்நாற்றம் வீசுவதாகவும் தெரியவருகிறது.

இதனால் தாவனப் பகுதி அலுவலர்கள் நேற்று ஆணையாளரின் அலுவல் கட்டடத்தில் இருந்ததை அவதானிக்கமுடிந்தது. (ச-51)

# நீதிபதி கொலைச் சந்தேக...

குறித்த சந்தேகநபரை நாட்டிலிருந்து வெளியேற உதவும் திட்டங்களும் வகுக்கப்பட்டுள்ளன என்றும் தேரர் பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

கடந்த வியாழனன்று கொழும்பு பிரதம மஜிஸ்ரேட் சரோஜினி விஜயவர்த்தன சந்தேகநபருக்கு வெலிக்கடைச் சிறைச்சாலையில் நண்பர்கள் இருப்பதாக புலனாய்வு தகவல்கள் கிடைத்ததையடுத்து நெளபரை களுத்துறை சிறைச்சாலை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டிருந்தார். (ச-6)

## யாழ்ப்பாணம் மாநகரசபை

**2005 ஆம் ஆண்டுக்கான வியாபார உத்தரவுப்பத்திரம், வாகன, மிருக வரி உரிமம் பெறுவதற்கான**

**விண்ணப்பம்**

யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குட்பட்ட சகல வர்த்தக நிலையங்களும் 2005 ஆம் ஆண்டிற்கான வியாபார உத்தரவுப் பத்திரத்தை எதிர்வரும் 31.03.2005 ஆம் திகதிக்கு முன் பெற்றுக் கொள்ளவும்.

கடந்த காலங்களில் உரிய கட்டணங்களை செலுத்தாதவர்கள் இவ்வாண்டிற்கான கட்டணத்துடன் பழைய நிலுவைகளையும் செலுத்துதல் வேண்டும். குறித்த திகதியின் பின்னர் உத்தரவுப் பத்திரம் பெறத் தவறியோர் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் அறியத்தருகின்றேன்.

**கலாநிதி க.குணராசா,**
மாநகர ஆணையாளர்,
மாநகரசபை,
யாழ்ப்பாணம்

(C/824)

# சுகாதார ஊழியர்களின் வேலை நிறுத்தம் தொடர்கிறது

## ஆயர் இல்லத்தில் இன்று சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபை சுகாதாரப் பகுதி ஊழியர்கள் தொடர்ந்தும் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றார்கள்.

இவர்களின் பிரச்சினையை சுமுக நிலைக்கு கொண்டுவரும் நோக்குடன் இன்று யாழ்.ஆயர் இல்லத்தில் விசேட கலந்துரையாடல் ஒன்று நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் யாழ். ஆயர் வணக்கத்திற்குரிய தோமஸ் சௌந்தரநாயகம், யாழ். மாநகரசபை ஆணையாளர் கலாநிதி க.குணராசா மற்றும் விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகள் குருநகர், திருநகரைச் சேர்ந்த மக்கள் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

குருநகர், திருநகர்ப் பகுதியில் ஏற்பட்ட கோஷ்டி மோதல்களினால் ஏற்பட்டுள்ள பதற்றநிலை தணியும் வரை தமது பணியை இடைநிறுத்தி தமது பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு கோரியே இவர்கள் தொடர்வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-19)

# மணல் ஏற்றிச் சென்ற ரக்ரர் பிடிக்கப்பட்டது

(ஊர்காவற்றுறை)

சட்டவிரோதமான முறையில் மணல் ஏற்றி வந்த ரக்ரர் ஒன்று கடந்த ஞாயிறு இரவு ஊர்காவற்றுறைப் பொலிஸாரினால் பிடிக்கப்பட்டுள்ளது.

மண்கும்பானில் இருந்து ஊர்காவற்றுறைக்கு இரவு வேலையில் சட்டவிரோதமாக மணல் ஏற்றிக்கொண்டு சென்ற சமயமே பொலிஸாரினால் இவ் ரக்ரர் பிடிக்கப்பட்டுள்ளது.

மேற்படி ரக்ரர் ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

சாரதி பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார். (ப-75)

# மகேஸ்வரன் குழப்பத்தை...

கடந்த மூன்று தினங்கள் நடைபெற்ற பாராளுமன்ற அமர்வுகளில் மகேஸ்வரன் நடந்து கொண்டவிதம் கண்டிக்கப்பட வேண்டியது.

நேற்று முன்தினம் அவர் சபாநாயகரின் ஆசனத்தை நோக்கி கிளாஸ் ஒன்றை எறிந்தபோது பாராளுமன்ற அலுவலர் ஒருவர் காயமுற்றார். நேற்று பாராளுமன்ற பாரம்பரியங்களை மீறி செங்கோலை எடுத்துச் சென்றார்.

இது மகேஸ்வரனின் பின்னணியில் இருந்த மற்றுமொருவர் இந்தச் செயலைச் செய்வதற்கு உந்துசக்தியாக இருந்துள்ளார். மகேஸ்வரன் தமிழர் என்ற காரணத்தினால் எமது பெரும்பான்மையினத்துக்கு எதிராகத் தூண்டிவிடும் நடவடிக்கையாகக்கூட இருக்கலாம்.

இச்சம்பவத்தை அவதானிக்கும்போது ஐக்கிய தேசியக் கட்சிக்குள் பிளவு ஏற்பட்டுள்ளது என்பது புலனாகிறது என்று அவர் மேலும்தெரிவித்தார். (த-04)

# மட்டக்களப்பில்...

அலுவலகம் சிறு சேதத்திற்கு உள்ளானது.

இது தொடர்பாக சட்டத்தரணி மட்டக்களப்பு பொலிஸில் புகார் செய்துள்ளார்.

இதேவேளை நேற்றிரவு ஓட்டமாவடியில் முகமது அலியார் சேகு இஸ்மாயில் என்பவரின் வீட்டின் மீது இனந்தெரியாத நபர்களினால் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டுள்ளது.

இதில் எவருக்கும் எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை.(த-08)

# திஸநாயக்க மீதான...

உச்சநீதிமன்றத்தினால் நீதிமன்றத்தை அவதூறு செய்தார் என்ற குற்றச்சாட்டில் நேற்று முன்தினம் 2 வருடங்கள் சிறைசென்ற எஸ்.பி.திஸாநாயக்காவை மீண்டும் பாராளுமன்றம் கொண்டுவர வேண்டும். அவர் வழமைபோலவே ஒரு பாராளுமன்ற உறுப்பினராக செயற்பட எவ்வித இடையூறுகளும் இருக்கக்கூடாது என்று கோரி ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் நேற்று சபையின் நடுப்பகுதிக்குச் சென்று கோஷமிட்டதால் அடுத்தடுத்து இரண்டு தடவைகள் அமர்வுகள் ஒத்திவைக்கப்பட்டன.

நேற்றுக் காலை பாராளுமன்றத்தில் முதலில் உரையாற்றிய அமபாந்தோட்டை மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் மகிந்த விஜயசேகர, திஸநாயக்கவின் குடும்பத்தின் சார்பில் மேற்கண்ட கோரிக்கையை முன்வைத்தார். இதற்கு ஆளும் தரப்பு பாராளுமன்ற உறுப்பினர்களிடமிருந்து பலத்த எதிர்ப்பு கிளம்பியது.

ஆளும் கூட்டமைப்பின் பிரதம கொறடாவும், அமைச்சருமான ஜெயராஜ் பெர்ணான்டோ புள்ளே எதிர்க்கட்சியினரின் இந்தக் கோரிகையினை பாராளுமன்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் ஆராயலாம் என்றும் சபை நடவடிக்கைகளை குழப்பவேண்டாம் என்றும் கோரினார்.

ஆனால், ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் விடாப்பிடியாக அவ்விடத்திலேயே நின்றுகொண்டிருந்தனர்.

பின் சபையின் மத்திய பகுதிக்கு வந்து கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டம் செய்தனர். பாராளுமன்ற செங்கோலும் எதிர்க் கட்சி எம்.பிக்களினால் தூக்கிச் செல்லப்பட்டது. இதனால் ஏற்பட்ட களேபரத்தினால் சபாநாயகர் டபிள்யூ.ஜே.எம்.லொக்கு பண்டார சபை அமர்வுகளை சுமார் 15 நிமிடங்கள் ஒத்திவைத்தார்.

மீண்டும் சபை கூடியபோது செங்கோல் கொண்டுவரப்பட்டிருந்தபோதிலும் எதிர்க் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் கோரிக்கையிலிருந்து தளர்வுறாமல் விடாப்பிடியாக நின்றனர்.

இதனால் சபை அமர்வுகளை இன்று காலை 9.30 மணிவரை சபாநாயகர் ஒத்திவைத்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியினர் பாராளுமன்றத்தில் நடாத்திவரும் போராட்டம் தொடர்பாக கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவிக்கையில்,

தமது போராட்டம் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லப்படுமென திஸநாயக்க மீண்டும் பாராளுமன்றம் வரும்வரை இப் போராட்டம் தொடரும் எனவும் 2005 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் மீதான வாக்கெடுப்புக்கு அபாயம் உள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் ஐக்கிய தேசியக் கட்சி எதிர்வரும் வாரங்களில் வீதிக்கு இறங்கி அரசுக்கு எதிராகப் போராடவுள்ளதாக அவர் தெரிவித்தார். (த-04)

# சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டி

(யாழ்ப்பாணம்)

இலண்டனிலிருந்து வருகை தந்திருக்கும் சேர்.பிற்றன் ஈழத் தமிழர் உதைபந்தாட்ட அணிக்கும் யாழ். பல்கலைக்கழக உதைபந்தாட்ட அணிக்கும் இடையிலான சிநேகபூர்வ உதைபந்தாட்டப் போட்டி ஒன்று இன்று மாலை 4 மணிக்கு யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது. (ச-07)

# ஒளிவிழா

(புங்குடுதீவு)

புங்குடுதீவு மகா வித்தியாலயத்தில் ஒளிவிழா இன்று காலை 10 மணிக்கு அதிபர் க.தர்மகுணசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக பங்குத்தந்தை வண.இ. இமானுவேல் கலந்து கொள்ளவுள்ளார். (ச-126)

# சைக்கிள் அபகரிப்பு

(யாழ்ப்பாணம்)

சைக்கிளில் சென்றவரை வழிமறித்த இனந்தெரியாத கும்பல் அவரை நிலத்தினுள் தள்ளி விழுத்திவிட்டு சைக்கிளை அபகரித்துச் சென்றது.

இச்சம்பவம் நேற்றிரவு 7.30 மணியளவில் யாழ்ப்பாணம் அன்ன சத்திரலேனில் இடம்பெற்றுள்ளது.

யாழ். மாநகரசபையில் கடமைபுரியும் சுகாதாரப்பகுதி உத்தியோகத்தர் ஒருவரின் லுமாலா சைக்கிளே இவ்வாறு அபகரிக்கப்பட்டுள்ளது. ஆவணங்கள் அடங்கிய அவரது கைப்பையும் பறித்துச் செல்லப்பட்டுள்ளது. (த)

# இந்திய...

செயற்பட்டுவருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியக் கடற்படையினரால் இலங்கை கடற்படையினருக்கு வழங்கப்படும் இந்தக் கூட்டுப் பயிற்சியில் பங்குகொள்ள இந்தியப் போர்க்கப்பல் ஜெனரலான வைஸ் அட்மிரல் வி.பி.சிங் கொழும்பு வரவுள்ளார்.

இந்திய கடற்படையின் சி.பி எஸ்.சுரங், சி.பி.எஸ்.துர்க்கா, பாய் தேஸ்முக் ஆகிய போர்க் கப்பல்களும் இலங்கை கடற்படை தரப்பில் மிகப்பெரும் தாக்குதல் போர்க் கப்பலான சையூரா, போ.பி.வி. ஜெயசேகர தாக்குதல் விசைப்படகு வேகமாகத்தாக்கும் உலங்குவானூர்தி, வேகமாகத் தாக்கும் விசைப்படகு என்பன பயன்படுத்தப்படவிருக்கின்றன.

இந்திய - இலங்கை கூட்டுப் பயிற்சி ஒப்பந்தத்திற்கான உடன்படிக்கை இலங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கடந்த மாத இறுதியில் மேற்கொண்ட இந்தியப் பயணத்தின்போது புதுடில்லியில் கைச்சாத்திடப்பட்டது குறிப்பிடத்தக்கது. (ச-19,5,4,)









இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.12.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.